உ

# அருள் ஒளி



இதழ் 159

மார்கழி 2021

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

தெல்லிப்பழை, இலங்கை.

26 FEB 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் நெஞ்சினில்

## என்றும் இருக்கிறாய்



அன்னை துர்க்கைதன் ஆலயத் தேற்றிய
அரிய தூண்டா மணிவிளக் காயினை
நின்னு ழைப்பினால் தொண்டினால் நேர்மையால்
நிமிர்ந்த திந்தத் தமிழினம் : தாயென
உன்னை ஏற்றுத் தலைமையைத் தந்தது
உச்சி மேல் வைத்துப் போற்றி உவந்தது
பொன்மனத்தினாய் போயினை என்பது
பொய் எம் நெஞ்சினில் என்றும் இருக்கிறாய்!

கவிஞர். சோ.ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. ப. சேயோன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

மார்கழி - 2021 மாதமலர்

T.P : 021 321 3151, 021 224 1909

e.mail: thurkaiammantemple@gmail.com
face book: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3


## சைவ ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்பட்டு வருவதை உடன் தடுக்க வேண்டும்

கடந்த சில வருடங்களாக சைவ ஆலயங்களில் கருங்கல் விக்கிரகங்கள், ஐம்பொன் விக்கிரகங்கள், மரத்தால் செய்யப்பட்ட வாகனங்கள், பித்தளைப் பொருட்கள், திட்டமிட்டு திருடுவது வழக்கமாகிவிட்டது. இவ்விடயம் தொடர்பாக சைவ சமய நிறுவனங்கள் பல தடவைகள் அறிக்கைகள் விட்டு அக்கறை கொள்ளுமாறு பொறுப்பானவர்களுக்கு வேண்டுதல் விடுத்தபோதும் சரியான பயன் கிட்டவில்லை. கடந்த வாரம் வலிவடக்கில் தொடர்ந்து ஐந்து திருக்கோயில்களில் விக்கிரகங்கள் திருட்டு போனது. இது குறித்து ஆலய அறங்காவலர்களும் மக்களும் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகினர்கள். ஊடகங்களில் இவ்விடயம் தொடர்பாக பரவலாக செய்திகள் வெளிவந்தன. அகில இலங்கை இந்து மாமன்றம் இத்திருட்டுக்கள் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாண ஆளுநரையும் பொலீஸ் அதிகாரிகளையும் வேண்டினர்.

தெல்லிப்பழை, காங்கேசன்துறை பொலீசார் இரகசிய பொலிசார் ஊடாக எடுத்த முயற்சி முதலில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அதன்பின் நவக்கிரியிலும் கொழும்பு வத்தளையிலும் சுமார் இருபத்தியொரு விக்கிரகங்கள் மீட்கப்பட்டு தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டது. இத் திருட்டை கண்டுபிடிப்பதில் அயராது உழைத்து செயற்பட்ட பொலிசார் பாராட்டுக்குரியவர்கள்.

சென்ற 28.12.2021 அன்று நல்லை ஆதீன சுவாமிகளை சந்தித்த பலாலி இராணுவ அதிகாரியிடம் நல்லை ஆதீன சுவாமிகள் உருக்கமான வேண்டுகோள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை விடுத்துள்ளார். சைவ ஆலயங்களில் நடைபெறும் திருட்டை தடுப்பதற்கு இராணுவம் உதவ வேண்டுமென அவர் வேண்டுதல் விடுத்தார். இங்கு திருடப்படும் பழமை வாய்ந்த விக்கிரகங்கள் வாணிபம் செய்யப்பட்டு தென்னிலங்கையில் விருந்தினர் விடுதிகள் மற்றும் நிறுவனங்களில் வரவேற்பு வாயில்களில் காட்சிப்படுத்தப்பட்டு வருவதை நாம் உணரலாம். இக் கொடூரம் உடன் நிறுத்தப்படவேண்டும். மக்கள் பிரதிநிதிகள் இவ்விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்கள் மண்ணில் கடவுள் சன்னிதானங்களை உதாசீனம் செய்யும் கொடிய செயற்பாட்டை நிரந்தரமாக நிறுத்துவதற்கு உடனடியாக செயல்பட வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

**பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்**
**பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்**
**மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்**
**வணங்குகின் றார்அணங் கின்மண வாளா**
**செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்**
**திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே**
**இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்**
**எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.**

திருச்சிற்றம்பலம்

**- மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருப்பள்ளியெழுச்சி**


**உ**

**அம்பாள் துணை**

**தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

**தலைவாசற் கோபுரத் திருப்பணி**

ஸ்ரீ துர்க்கை அம்பாளின் தலைவாசற் கோபுரத் திருப்பணிக்கான அன்பளிப்புக்களை பின்வரும் வங்கிக் கணக்கின் மூலம் செலுத்தலாம். அல்லது தேவஸ்தான அலுவலகத்தில் நேரடியாக வழங்கி பற்றுசீட்டினை பெற்றுக்கொள்ளலாம்.

**இலங்கை வங்கி, சுன்னாகம்.**

**கணக்கு இலக்கம்: 77683985**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருத்ரா தரிசனம்

மார்கழி மாதப் பௌர்ணமியோடு, திருவாதிரை நட்சத்திரம் கூடி வரும் நாளன்று "திருவாதிரை" திருவிழா "ஆருத்ரா தரிசனம்" மாக வழிபடப்படுகிறது. ஆருத்ரா என்ற வடமொழி சொல் தமிழில் "ஆதிரை" என்று அழைக்கப்படுகிறது. அதோடு திரு என்ற அடைமொழி சேர்த்து "திருவாதிரை" என்று சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

திருவாதிரை அன்று நடராஜப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெறும். இந்த ஆனந்தத் திருநாளில் ஆனந்த தாண்டவம் ஆடும் நடராஜப் பெருமானை சிதம்பரத்திற்குச் சென்று தரிசிப்பது முக்தியைத் தரும். சிவபெருமானுக்கு உகந்த நட்சத்திரம் "திருவாதிரை".

பாற்கடலில் பள்ளிகொண்ட பரமபதநாதனாம் ஸ்ரீமகாவிஷ்ணு திடீரென்று மகிழ்ச்சியில் திளைத்திருந்தார். இதைக் கண்ட ஆதிசேஷன் தங்களது ஆனந்தத்திற்குக் காரணம் என்ன? என்று கேட்க, நாராயணரோ ஆடல்வல்லான் சிவபெருமான் திருவாதிரை நாளன்று நடராஜராக ஆடிய திருத்தாண்டவமே தனது மகிழ்ச்சிக்கு காரணம் என்றார்.

நாராயணரையே மகிழ்ச்சியில் ஆழ்த்திய சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவத்தைக் காண ஆதிசேஷனுக்கு ஆவல் அதிகமாகியது. தன்னுடைய ஆசையை பரமபதநாதனிடம் சொல்ல, அவரோ ஆதிசேஷனுக்கு ஆசி அளித்து அனுப்பினார். பூலோகத்தில் பதஞ்சலி முனிவராக அவதரித்தார் "ஆதிசேஷன்". ஆதிசேஷன் பாதி முனிவராகவும், பாதி பாம்பாகவும் உருக்கொண்டு பூலோகத்தில் தவம் இருந்தார். பல ஆண்டுகளாகத் தவம் செய்து, தவம் நிறைவு பெறும் காலம் வந்தது.

இவ்வாறு தவம் செய்து கொண்டிருக்கையில் பதஞ்சலி முனிவர் முன் எம்பிரான் சிவபெருமான் தோன்றி திருக்காட்சி அளித்தார். அவரை நமஸ்காரம் செய்து வணங்கினார் பதஞ்சலி முனிவர். சிவபெருமான் அவரிடம் நீ என்னைத் தவம் செய்த நோக்கம் போலவே, வியாக்ரபாதரும் என்னை நோக்கித் தவம் செய்து காத்துக் கொண்டிருக்கிறார்.

நீங்கள் இருவரும் தில்லை வருவீர்களாக!. உங்களுக்கு யாம் திருத்தாண்டவ திருக்காட்சியைக் காட்டி அருளுவோம் என்று கூறிவிட்டு மறைந்தார். பதஞ்சலி மற்றும் வியாக்ரபாத முனிவர் இருவரும் சிதம்பரம் தில்லை நடராஜர் கோவிலுக்கு வந்து சேர்ந்தார்கள். இந்த உலகமானது நிலம், நீர், காற்று, ஆகாயம் மற்றும் நெருப்புகளால் ஆனது. அவை அனைத்துக்கும் ஆதாரமாக இருப்பது எம்பிரான் சிவபெருமானின் ஆனந்த நடனம் தான்.

இறைவன் அசைவதால் தான் உலகமே அசைகிறது. "நான் அசைந்தால் அசையும் அகிலம் எல்லாமே" என்பதைப்போல் எம்பிரானின் நடனம் தான் உலகை வாழ்விக்கிறது. நடராஜரின் நடனம் மட்டும் மொத்தம்- 108 இதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் மட்டும் தனித்து ஆடியது- 48 அங்கு இரண்டு முனிவர்களும் எம்பிரான் சிவபெருமானின் நடராஜரின் ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள். மார்கழி திருவாதிரையான அன்று எம்பிரான் ஆடல்வல்லான் நடராஜரின் தரிசனத்தைக் கண்டால் தீராத நோய்களும், பாவங்களும் விலகும். தில்லையில் சிவபெருமானின் நடனத்தைப் பார்க்க முக்தி கிடைக்கும்.

**சேந்தனார் வரலாறு**

சேந்தனார் என்பவர் ஒரு விறகுவெட்டி. அவர் சிதம்பரம் அருகேயுள்ள ஒரு ஊரில் வாழ்ந்து வந்தார். அவர் சிறந்த சிவபக்தர். தினமும் ஒரு சிவனடியாருக்காவது உணவளித்துவிட்டு பிறது தான் உண்ணுவது சேந்தானாரின் கடமையாக இருந்தது. சேந்தனாரின் பக்தியை உலகுக்கு உணர்த்த சிவபெருமான் திருவுள்ளம் கொண்டார்.

ஒருநாள் மழைபெய்தது. அதனால் விறகு விற்கமுடியவில்லை. விறகு விற்றால் தான் அரிசி வாங்குவதற்குப் பணம் கிடைக்கும். எனவே, அவரால் அன்று சமையல் சமைக்க முடியவில்லை. மாறாக அரிசியைப் பொடித்து மாவாக்கி, அதில் களி செய்து சிவனடியார் யாரேனும் வருவார்களா என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார். ஆனால், யாரும் தென்படவில்லை. சிவபெருமான் சிவனடியார் வேடம் பூண்டு சேந்தனாரின் வீட்டிற்குச் சென்றார்.

சேந்தனாரிடம் உண்ண ஏதாவது இருக்கிறதா? என்று கேட்டார். அவரோ அகமகிழ்ந்து களியை அவருக்கு அன்போடு அளித்தார். அதை அன்போடு மனமகிழ்ந்து ஏற்றுக் கொண்டார் “சிவபெருமான்”. எஞ்சியிருந்த களியை எனக்கு அடுத்த வேளை உணவிற்குத் தருவாயா? என்று சேந்தனாரிடம் கேட்டு வாங்கிக் கொண்டார் “சிவனடியார் வேடத்தில் வந்த சிவபெருமான்”. அன்று இரவில் சிதம்பரத்திலுள்ள அரசனின் கனவில் சிவபெருமான் காட்சி கொடுத்தார். சேந்தனார் என்ற பக்தனின் அன்புக்குக் கட்டுப்பட்டு, தான் சேந்தனார் வீட்டில் களி உண்ட செய்தியைக் கூறினார்.

**சிதம்பரம்**

மறுநாள் அதிகாலை வழக்கம் போல் தில்லைவாழ் அந்தணர்கள் சிதம்பரம் திருக்கோவிலின் கருவறையைத் திறந்தார்கள். அப்போது எம்பிரானைச் சுற்றி களிச்சிதறல்கள் இருப்பதைக் கண்டார்கள். இது என்ன அதிசயம் என்று வியந்தார்கள். உடனே, அரசருக்குச் செய்தியைத் தெரிவித்தார்கள். இதைக் கேட்ட அரசன் நேற்றிரவு தான் கண்ட கனவை நினைத்து மகிழ்ந்தான்

அப்போது சிதம்பரத்தில் தேர்த்திருவிழா நடந்து கொண்டிருந்தது. அரசன் உட்பட அனைவரும் அங்கு இருந்தார்கள். சேந்தனாரும் அந்த தேர்த் திருவிழாவிற்கு வந்திருந்தார். அரசர் மற்றும் அனைவரும் எம்பிரான் சிவபெருமானைத் தேரில் அமர்த்தி, தேர்வடம் பிடித்தார்கள். தேர் நகரவே இல்லை. மழைக்காரணமாக சேற்றில் சிக்கிய தேர் அசையாமலும் இருந்தது. மன்னன், மக்கள் அனைவரும் மனம் வருந்தினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது ஓர் அசரீரி கேட்டது. "சேந்தா நீ பல்லாண்டு பாடு" என்று அசரீரி கேட்டது. சேந்தனாரோ ஒன்றுமே அறிந்திடாத யான் எப்படிப் பல்லாண்டு பாடுவேன்? என்று எம்பிரானை வணங்கித் தொழுது நின்றார். எம்பிரானோ யாம் உனக்கு அருள்புரிவோம்! என்று அருள் புரிந்தார்.

அப்போது சேந்தனார் "மன்னுகதில்லை" என்று தொடங்கி "பல்லாண்டு கூறுதுமே" என்று முடித்துப் பதின்மூன்று பாடல்கள் எம்பிரானை வாழ்த்தி வணங்கிப் பாடினார். உடனே, தேர் அசைந்தது. அரசரும், சிவனடியார்களும் சேந்தனாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். சேந்தனாரோ "அரசன் அடியவனின் காலில் விழ வேண்டாம்" என்று தயங்கிக் கூற, அரசரோ நடராஜப் பெருமானே தங்களின் வீட்டிற்குக் களி உண்ண வந்தார் என்றார் அதைக்கேட்ட சேந்தனார் எம்பிரான் அடியவர்கள் மீது வைத்திருந்த கருணையை எண்ணி இந்த அடியேனின் வீட்டுக்கும் வந்ததை நினைத்து பரவசமடைந்தார். இதன் காரணமாக திருவாதிரை அன்று களி உண்ண வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அன்றைய தினத்தில் ஆடல்வல்லானின் அனைத்து திருத்தலங்களிலும் களி படைக்கப்படுகின்றது. அதனால் தான் "திருவாதிரை அன்று ஒருவாய்க்களி" பழமொழி வந்தது. ஆதிரை முதல்வனுக்கு களி செய்து வணங்கி அவரின் திருவடியை அடைவோமாக.

நன்றி - இணையம்

**மானக்கஞ்சாற நாயனார்**

கஞ்சாறூரில் வேளாளர் குலத்தில் தோன்றிய மானக்கஞ்சாறர் சேனாதிபதியாகத் தொழில் புரிந்தவர். சிவனடியார்களைச் சிவன் என்று எண்ணுபவர். அவர்கள் குறிப்பறிந்து வேண்டியவற்றைக் கொடுப்பவர். நீண்டகாலம் குழந்தைப் பேறில்லாத இவர் திருவருளை வேண்டி ஒரு பெண் குழந்தையைப் பெற்றார். அந்தக் குழந்தை மணப்பருவத்தை அடைந்ததும் ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்குத் திருமணம் பேசினர். உடன்பாடு கண்டதும் ஏயர்கோன் கலிக்காம நாயனார் மணக்கோலம் பூண்டு கஞ்சாறூரை வருகின்றார். மணமகன் கஞ்சாறூரை அடையுமுன் சிவபெருமான் மாவிரதக் கோலத்துடன் மானக்கஞ்சாறர் வீட்டுள் நுழைகின்றார். வரவேற்பைப் பெற்ற மாவிரதர் "இங்கென்ன நடைபெறவுளது" என்று கேட்டு மகளுக்குத் திருமணம் என்றதும் "சோபனம் உண்டாகுக" என்று வாழ்த்துகின்றார். புதல்வியாரை வரச் செய்து தொழவைத்தவேளை பெண்ணின் கூந்தல் தமது பஞ்சவடிக்கு உதவக்கூடும் என்கிறார் மாவிரதர். உடனும் உடைவாளால் அரிந்து மாவிரதரிடம் நீட்டுகிறார் நாயனார். மாவிரதர் தம் கோலத்தை மறைத்து உமையம்மையுடன் மழவிடைமேற் காட்சி தந்தார். வணங்கி நின்ற நாயனாரிடம் "உமது அன்பை உலகறியச் செய்தோம், எம்மை வந்தடைக" என்று கூறி இறையவர் மறைந்தார். தாம் அந்தக் காட்சியைக் காண வாய்ப்பிலாது போய்விட்டதே என்று செய்தி அறிந்த மணமகன் துன்பப்பட்டார்.

- மானக்கஞ்சாறர் முத்தியடைந்த திருநாள் மார்கழிச் சுவாதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத் திருமகளின் சைவப் பிரசாரச் சால்பு

கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை,
(ஓய்வு நிலை அதிபர்).

தெய்வத் திருமகள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்றால் தமிழ் கூறும் நல்லுலகில் மட்டுமல்ல தமிழர்கள் வாழும் புலம் பெயர் நாடுகளிலும் அறியாதார் இல்லை. இதற்குக் காரணம் அவரது பல்பரிமாணங்கொண்ட செயற்கருஞ் செயல்களேயாகும் என்பது சொல்ல வேண்டியதில்லை. இச் செயற்கரும் செயல்களில் முதன்மையானது- "சைவப் பிரசாரச் சால்பே"யாகும்.

நாவலர் பெருமானுக்குப் பின் நம் நாட்டில் சைவப்பிரசாரத்தில் தலைநின்றவர் இவரே. நாவலர் பெருமான் காட்டிய வழியில் பிரமச்சரியம் காத்துக் காலத்துக்கு ஏற்ற வகையில் சைவப்பிரசாரத்துக்கோர் கலங்கரை விளக்காகப் பிரகாசித்தவர். எண்ணில்லா இளந்தலைமுறையினர் "நீங்கள் என்னத்துக்குப் படிக்கப்போகின்றீர்கள்" என்ற வினாவுக்கு "நாங்கள் தங்கம்மா அப்பாக்குட்டிக்குப் படிக்கப் போகின்றோம்" என விடை சொல்லும் அளவுக்கு எழுச்சியையும், கவர்ச்சியையும் உண்டாக்கியவர்.

இவர் தனது பதினாறாவது வயதிலே இராமநாதன் அரசினர் பயிற்சிக் கல்லூரியிற் பயிற்சி பெறுங்காலத்தில் (1941) அப்பூதியடிகள் பற்றிய பேச்சுடன் சைவப்பிரசாரத்தை ஆரம்பித்தார். அன்றைய சைவ சமூக நிலையை நன்கு உணர்ந்திருந்த அவர் உள்ளத்தில் சைவப்பிரசாரம் செய்ய வேண்டிய இன்றியமையாமை புலப்பட்டது. மக்கள் சைவசமய அறிவு குறைந்தவர்களாயும் சைவாலயங்களில் சைவக் கொள்கைக்குப் புறம்பான சின்னமேளம் என்னும் தரக்குறைவான தாசிப் பெண்களின் நடனங்களும், கணப்பொழுதில் எரிந்து மக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் வாண வேடிக்கைகளும் மலிந்திருந்தகாலம் அது. இது தவறான சிவத்துரோகமான செயல் என்பதை மக்களுக்குணர்த்துவதற்கு சைவப்பிரசாரம் தேவைப்பட்டது. அவர் அடிக்கடி சொல்லும் ஒரு திருக்குறள்.

**'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்'**

என்பது. செய்யக் கூடாததைச் செய்வதால் கேடுவரும். செய்ய வேண்டியதைச் செய்யாமல் விடுவதாலும் கேடுவரும். அன்றைய நிலையில் இந்த இரண்டு முக்கியமான விடயங்களும் அவரது உள்ளத்தில் எழுச்சியை உண்டாக்கின.

சைவ ஆலயங்களில், சைவ மக்கள் வாழ்வில் செய்யக் கூடாதவற்றைச் செய்து கேடு விளைவதைக் கண்டார். இதைத் தடுத்து நிறுத்துவதற்குச் சைவ மக்கள் செய்ய வேண்டியது என்ன என்பதைத் தெரியவைப்பதற்குச் சைவப்பிரசாரமே தகுந்தவழி எனத் தேர்ந்து கொண்டார். இத்துறையில் இவர் பெற்ற வெற்றி ஒருகாலத்தில் சின்னமேளம், வாண வேடிக்கை பார்க்கப் போனது போலத் தங்கம்மா அப்பாக்குட்டியின் பிரசங்கமாம் என்று மக்கள் திரண்டு சென்று கேட்டுப்பயன் பெறும் நிலையை உருவாக்கியது. இவர் ஆலயந்தோறும் தித்திக்கும் செந்தமிழில், தெய்வீகக் கருத்துகளைக் கேட்போர் சிந்தையைக் கொள்ளை கொள்ளும் வகையில் பிரசாரம் செய்தமை இவரைத் தெய்வத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகளாகவும், இவர் வாய்ச் சொல்லை தெய்வ வாக்காகவும் மக்கள் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு உயர்த்தியது.

சைவப்பிரசாரத்துக்கு இலக்கணம் வகுத்தவர் இவர். ஒரு சைவப்பிரசாரகருக்கு இருக்க வேண்டிய சால்புகள் எவை என்று கேட்டால் அதற்கு விடை காண வேறெங்கும் அலைய வேண்டியதில்லை. தெய்வத் திருமகளைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம்.

அவர் செய்து காட்டிய சைவப்பிரசாரத்தைக் கொண்டு சைவப்பிரசாரகருக்கு இருக்க வேண்டிய சால்புகளை நாம் ஆறு அங்கங்களில் கீழே காணலாம். அவை:

1. ஆழ்ந்து அகன்ற நுண்ணிய அறிவுத் தேட்டம்.
2. போதனை போல சாதனையிலும் வாழ்ந்து காட்டல்
3. கேட்டார்ப் பிணிக்கும் சொல்லாட்சி.
4. கவர்ச்சியான பாங்கு.
5. பிரசார உத்தி முறைகள்.
6. உலகளாவிய நோக்கு.

இச்சால்புகள் ஒவ்வொன்றையும் தனித்தனி விரிவாக நோக்குவோம்.

**01. ஆழ்ந்து அகன்ற நுண்ணிய அறிவுத் தேட்டம்**

பாடசாலை மட்டக் கல்வியில் அக்காலத்தில் (S.S.C) எனப்பட்ட சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சைவரை முறையாகக் கற்றுப் பாடசாலைப் பருவத்திலே சமய தீட்சையும் பெற்று சொற்பொழிவு, பண்ணிசை, புராணப்படனம் முதலான சைவக் கலைகளிலும் முதன்மை பெற்றார் (1940).

சைவப் பெண்பிள்ளைகள் சைவப்பண்பாட்டுக் கல்வியிலும் கலை கலாசாரத்திலும் உருவாக்கம் பெறவேண்டும் என்னும் உயரிய நோக்குடன் சேர். பொன். இராமநாதன் அவர்களால் உருவாக்கப் பெற்ற சுன்னாகம் இராமநாதன் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் (1941-1944) முழுமையான சைவப் பண்பாட்டின் உறைவிடமாக உருவானார். அத்துடன் பாடம் சொல்லும் போது யாருக்குச் சொல்கிறோம், எப்படிச் சொல்ல வேண்டும் என்ற பயிற்சியையும் பெற்றுக் கொண்டார். அங்கு பெற்ற சொல் விற்பனமும், அவதானமும், கல்வி சொல்லவல்ல நல்வித்தையும் அவரது பிற்காலச் சைவப் பிரசாரத்துக்கு அத்திவாரமாயிற்று.

1941 இல் பிரவேசபண்டிதர் படிப்பைத் தொடங்கிய இவர் படிப்படியாகப் பாலபண்டிதர், பண்டிதர் பட்டங்களுக்கு உரிய இலக்கண, இலக்கிய, இதிகாச, சமஸ்கிருத பாடங்களையும் தக்க சான்றோரிடம் கற்றுத் தேர்ந்து தமிழறிந்த பண்டிதையாக மலர்ந்தார். தொடர்ந்து சைவசமய சாத்திர தோத்திர திருமுறை, புராணம், சைவ இலக்கியங்களில் ஆழ அகலமாகக் கற்றுச் சென்னை சைவசித்தாந்த மகா சமாசத்தின் சைவப்புலவர் பட்டத்தையும் (1958) பெற்றுக் கொண்டார்.

சைவப்பண்பாட்டுடன் கூடிய ஆசிரியப் பயிற்சியும், தமிழை ஆழ அகலக் கற்ற பண்டிதர் தகைமையும், சைவசமய சாத்திர தோத்திர நுண்ணறிவு மிக்க சைவப்புலவர் பட்டமும் இவரை ஆழ்ந்து அகன்ற நுண்ணிய அறிவுசான்றவர் ஆக்கின. சைவப் பிரசாரத்துக்கேற்ற ஆளுமையையும், ஆற்றலையும் அங்கீகாரத்தையும் தேடித் தந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. போதனை போலச் சாதனை**

**'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**

**சொல்லிய வண்ணம் செயல்'**

என்பார் வள்ளுவர். இது சைவப்பிரசாரகர்க்கு முற்றிலும் பொருந்தும். மேடையில் நின்று முழங்கலாம் அதைத் தன் வாழ்வில் வழங்குபவரைத் தான் உலகம் நம்பும் மற்றவர் சொல் புறக்குடத்து நீர் போல வீணாகப் போய்விடும். தன் குடும்பப் பின்னணியிலும், கற்ற பாடசாலைகளிலும் ஆசிரிய பயிற்சி பெற்ற இராமநாதன் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் சைவ வாழ்வியலை முழுமையாகப் பழக வாய்ப்பானது. சைவசமய தீட்சை பெற்றுச் சைவ ஆசார அனுட்டானம் உடையவராய் நித்திய பூசை வழிபாடு உடையவராய் அறவாழ்வில் மலர்ந்தார். செய்வதையே சொல்லியும், சொல்வதையே செய்தும் வாழ்ந்த அரிய செயல், "வாக்கும் வாழ்வும்" ஒன்றாக வாழ வழிகாட்டியது. அவர் வாக்கை நூறு வீதம் மக்கள் மதித்தார்கள். சமூகம் உயர்வுகண்டது.

**03. கேட்டார்ப்பிணிக்கும் சொல்லாட்சி**

**'கேட்டார்ப் பிணிக்கும் தகைவாய்க் கேளாரும்**

**வேட்ப மொழிவதாம் சொல்'**

என்ற வள்ளுவர் குறளுக்கு முழுப் பொருத்தமாக இலக்கியமாகத் திகழ்ந்தார். தன்னுடைய பேச்சுத்திறத்தால் இவ்வையத்தைப் பாலித்த பெருமை சொல்லில் அடங்காது. செந்தமிழ் அமிழ்தத்தில் சைவத்தைக் குழைத்தெடுத்து, தித்திக்கத் தித்திக்கத் தேனமுதாய் தருவதில் இவருக்கு நிகர் இவரே. அழகிய செந்தமிழ் சொற்களைத் தேர்த்தேடுத்து அற்புதமான இசையுடன் கூடிய இனிய குரலில் அவர் பேசுவதை ஒருமுறை கேட்பார் பின்னர் கேளாதிரார்.

இனிய தமிழ்ச் சொல்லாட்சி, இன்பம் பயக்கும் இசையுடன் பாடிப் பேசுதல், எவரையும் கவரும் ஓசைக் குரல் இனிமை, தனக்கெனத் தனித்துவமான பேச்சுப்பாணி- இவைகள் இவருக்கே உரியன என்பது மட்டுமல்ல மற்றவர் எவரும் முழுமையாகப் பின்பற்ற முடியாத தெய்வீக சக்தியுடன் கூடியவை.

**4. கவர்ச்சியான பாங்கு**

சரஸ்வதியே நேரில் வந்து நிற்பதைப் போன்ற அழகிய பொன்னிறமான தெய்வப் பெண்ணின் உருவம், பார்த்தவுடன் கையெடுத்துக் கும்பிட வேண்டும் என்னும் உணர்வைத் தரும் தெய்வீகக்களை ததும்பும் கோலம், எடுத்த எடுப்பில் எவரையும் இலகுவில் வசப்படுத்தவல்ல அன்பான உரையாடல், இவற்றால் கவரப்படாதவர் எவர் இருக்க முடியும் தெய்வத் திருமகள் பேசும் போது தெய்வமே முன்னால் வந்து நிற்பதைப் போன்ற காட்சியும், தெய்வத்தின் குரல்தான் கேட்கிறது என நம்பக் கூடிய கேள்விச் சுவையும் தனித்துவமானவை.

**5. பிரசார உத்திகள்**

இவர் தனது பேச்சுத்திறனால் மட்டுமல்ல எழுத்துத் திறத்தாலும் சைவப்பிரசாரத்தின் உச்சியில் நின்றவர். கட்டுரையாக்கம், நூலாக்கம், வானொலி, தொலைக்காட்சிப் பேச்சுகள், நேர்காணல்கள், சைவநற்சிந்தனைகள் மற்றும் பத்திரிகைகள் வாயிலான செய்திகள், பல்வேறு ஊடகங்களின் மூலம் மக்களின் வாழ்வியலுக்கான விரதங்கள், விழாக்கள், கிரியைகள் பற்றிய விளக்கங்கள் தருதல் முதலான பல உத்திகளைத் தனது சைவப் பிரசாரத்துக்காகப் பயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்சிந்தனைகளையும் ஒலிநாடாக்கள், சி. டீ. க்கள் மூலமும் வெளியிட்டு உலகளாவிய மட்டத்தில் பயன்பட வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவருடைய பேர் பெற்ற பேச்சுக்களை நேரில் கேட்க வாய்ப்பில்லாதவர்களும் படித்துப்பயன் பெறத்தக்கதாக நூலுருவில் கொடுத்தார். இந்த வகையில் மலேசியச் சொற்பொழிவுகள் (1971), பத்துச் சொற்பொழிவுகள் (1974), கந்தபுராணச் சொற்பொழிவுகள் (1976), இலண்டனில் ஏழுவாரம் (1987) என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

**6. உலகளாவிய நோக்கு**

அவர் பிறந்த ஈழத்திருநாட்டில் அவர் பேசாத ஊரோ, கோயிலோ, மன்றங்களோ, பாடசாலைகளோ, விழாக்களோ இல்லை எனலாம். ஈழத்துக்கு அப்பால் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பீஜித்தீவு, இலண்டன் நாடுகளிலெல்லாம் சைவப்பிரசாரம் முதலான மேற்கொண்டுள்ளார். தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சைவப்பிரசாரம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது இவரது நோக்கு ஆகும்.

ஈழத்துக்கு அப்பால் முதன்முறையாக 1965 மார்கழியில் சிதம்பரத்தில் நடைபெற்ற சென்னை சைவ சித்தாந்த மகாசமாச வைர விழாவில் மகளிர் மாநாட்டுக்குத் தலைமை தாங்குவதற்காக அகில இலங்கைச் சைவப்புலவர்கள் சங்கச் சார்பில் சென்றார். (யானும் உடன் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது) அங்கு இவர் ஆற்றிய உரையைப் கேட்டோர் மெய்மறந்து பாராட்டியதும், மாநாடு முடிந்தவுடன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கு அழைத்துப் பேசவைத்துக் கௌரவித்ததும் பெருமைக்குரியன.

இதைத் தொடர்ந்து 1973 இல் திருவிடைமருதூர் திருமுறை விழாவுக்குத் தலைமை தாங்கவும், 1974 இல் சிவகங்கை சைவசித்தாந்த மாநாட்டிலும், 1977 இல் கும்பகோணம் குடந்தைச் சிவனடியார் திருக்கூட்ட மாநாட்டிலும் 1980, இல் ஆரணி சைவசித்தாந்த மாநாட்டிலும், 1982 இல் காசி சைவசித்தாந்த மாநாட்டிலும் சொற்பொழிவாற்ற அழைத்துக் கௌரவிக்கப்பட்டார்.

மலேசியா சிங்கப்பூர் விழாக்களுக்கு 1971 முதல் 1977 வரை நான்கு முறைகள் அழைத்து ஒவ்வொரு முறையும் பலநாட்கள் பல்வேறு இடங்களிலும் பேசவைத்துக் கௌரவித்துப் பட்டங்களும் பதக்கங்களும் வழங்கியது மட்டுமல்லாமல், அச்சொற் பொழிவுகளையெல்லாம் நூலுருவில் கேளாரும் படித்துப் பயன்பெறவைத்தார். 1987 இலண்டன் மாநகரில் ஏழுவாரங்கள் தங்கியிருந்து செய்த பிரசங்கங்கள் எண்ணிலடங்கா. இவ்விதம் உலகளாவிய நோக்கில் தனது சைவப் பிரசாரத்தைச் செய்து சைவ உலகின் உலகப் பெருந்தகையாகப் போற்றப்பட்டார்.

சைவப்பிரசாரத்தில் அவருக்கு நிகர் அவரே என்பது முற்றிலும் உண்மை. தெய்வத் திருமகளின் சைவப்பிரசாரம் அவர் குரலின் எச்சங்களான ஒலிநாடாக்கள், ஒலித்தட்டுக்கள் (C. D) மூலம் நின்று நிலைக்கும். அத்துடன் அவரது ஆக்கங்களான நூல்கள் மூலமும் என்றும் நின்று நிலையான பயனைத் தரும் என நம்புவோம்.

**நன்றி - தெய்வத்திருமகள் வாழ்வும் பணிகளும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

**செ. றஜிதா,**
திருமகள் அழுத்தகம், சுன்னாகம்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

திருவாசகம் என்பது சைவ சமயக் கடவுளான சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும். இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர். தமிழில் மிகச் சிறந்த பக்தி இலக்கியங்களில் ஒன்று.

சிவபெருமானைப் பலவிதமாகப் பாடிப் பரவசப்பட்ட மாணிக்கவாசகரின் மொழி மிக எளிமையானது, நேர்த்தியானது. பல பாடல்களைப் பதம் பிரித்துச் சொன்னாலே நமக்குப் பாதி புரிந்துவிடும். பழந்தமிழ் இலக்கியப் பயிற்சி இருந்தால் மீதியும் புரிந்துவிடும். அதேசமயம், அந்த எளிய வடிவத்துக்குள் மாணிக்கவாசகர் பயன்படுத்தும் சில வாக்கிய அமைப்புகளும் உவமைகளும் நம்மை வியப்பில் ஆழ்த்தி, பின்னர் ஆழச் சிந்திக்கவைப்பவை. பன்னிரு திருமுறைகளில் திருமந்திரம் சிறப்புடையது. (10-ஆவது திருமுறை). ஆனால், அதைவிட சிறப்புடையதும் சிகரமானதும் திருவாசகமே - திருமுருக கிருபானந்த வாரியார்.

பன்னிரு சைவ சமயத் திருமுறைகளில் திருவாசகம் எட்டாம் திருமுறையாக உள்ளது. "திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்பது மூதுரை. அதற்கு முதன்மைக் காரணம், மாணிக்கவாசகரே உருகிய எழுதியிருக்கிறார். வாசிக்கிறவர்கள் அந்த உருக்கத்தை அப்படியே உணர இயலும்.

பக்திச் சுவையும், மனதை உருக்கும் தன்மையும் கொண்ட திருவாசகப் பாடல்கள், திருவாசகம் 51 பகுதிகளையும் 658 பாடல்களையும் கொண்டுள்ளது. நீத்தல் விண்ணப்பம் 50 பாடல்களைக் கொண்டுள்ளது. திருவெம்பாவையில் 20 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. திருவம்மானையும் 20 பாடல்களில் நடையிடுகிறது. திருப்பொற் சுண்ணம் முதல் திருவுந்தியார் வரை 6 பகுதிகளும் அவ்வாறே 20 பாடல்களால் நடையிடுகின்றன. எஞ்சிய பகுதிகள் பெரும்பாலும் 10 பாடல்கள் கொண்ட பதிகங்களாகவே அமைந்துள்ளன.

இந்நூலில் 38 சிவத்தலங்கள் பாடப் பெற்றுள்ளன. சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் போன்ற மாணிக்கவாசகரின் இந்நூலினைப் பல சமயத்தவரும் புகழ்ந்துள்ளனர். மாணிக்கவாசகர் எழுதி தில்லையில் இறைவனிடம் வைக்க அவரே கையெழுத்தினை இட்டதாகக் கூறுவர்.

மனிதன் தெய்வத்திடம் கூறியது திருவாசகம் தெய்வம் (கண்ணன்) மனிதனுக்கு (அர்ச்சுனன்) கூறியது கீதை மனிதன் (திருவள்ளுவர்) மனிதர்களுக்குக் கூறியது திருக்குறள் என்றொரு மூதுரையும் தமிழில் உள்ளது.

இந்நூல், மனிதனின் உள்ளத்தில் புகுந்துள்ள சிற்றியல்புகள், அவற்றைக்களையும் முறைகள், இறையாகிய பரம்பொருளை நாடுகிறவர்கள் பெறவேண்டிய பேரியல்புகள், அவற்றை வளர்க்கும் முறைகள், அருள் வேட்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளல், அருளைப் பெறல், அதில் ஆழ்ந்து தோய்தல், இறைவனைக் காணல், அவனோடு தொடர்பு கொள்ளல், அவனிடமிருந்து பெறவேண்டியதைப் பெறுதல், பக்தியைப் பெருக்குதல், அது இறை பக்தியாக வடிவெடுத்தல், இறையுடன் இரண்டறக் கலத்தல் ஆகியவற்றை முறையாகக் கூறுகிறது. திருவாசகத்திற்குத், தெய்வீக அருளிசை வடிவில் இசையமைத்து வெளியிட்டுள்ளார் இளையராஜா.

திருவாசகத்தில், இந்த வகையிலான பாடல்கள் தான் உண்டு, இத்தனை வரிகள் தான் உண்டு என்றெல்லாம் எந்த வரையறைகளும் கிடையாது. மூன்றே வரிகள் கொண்ட பாடல்களும் இருக்கின்றன. பல நூறு வரிகளைக் கொண்ட பாடல்களும் இருக்கின்றன, வெண்பா உண்டு. அகவற்பா உண்டு, விருத்தம் உண்டு. ஓர் உட்பிரிவில் ஒரே ஒரு பாடல் இருக்கும். இன்னோர் உட்பிரிவில் இருபது பாடல்களும் இருக்கும். அந்தாதியில் சில பாடல்கள் அம்மானை. தெள்ளேணம், சாழல், பொற்சுண்ணம் என்று விதவிதமான விளையாட்டுகள், செயல்பாடுகளை மையமாகக் கொண்ட பாடல்கள், பாவை, பள்ளியெழுச்சிப் பாடல்கள். சிவனைப் போற்றும் நூற்றுக்கணக்கான வர்ணனைகள், அடைமொழிகள், சிறப்புப் பெயர்கள், அற்புதமான தமிழ்ச் சொற்கள், தன்னைத் தாழ்த்திப் பேசுதல், இறைவனை உயர்த்திப் பேசுதல், அடியார் பெருமை சொல்லுதல், உலக மயக்கத்தில் வீழ்ந்திருப்போரைச் சாடுதல், உன்னதமான சிவபுரணத்தின் மகிமையை சொல்லுதல், பல்வேறு அருட்கதைகள், பிறப்பு, இறப்புச் சுழலின் வேதனை, அதிலிருந்து மீள்வதன் மேன்மை என அடுத்து என்ன வரப்போகிறது என்றே தெரியாத படி ஆச்சிரியங்களை வைத்திருக்கிறார் மாணிக்கவாசகர்.

ஆனால் வடிவம் எதுவானாலும் அதன் ஆழத்தில் இருப்பது அவரது இறைஞ்சல் தொனிதான். ஆந்தக் குரலை நாம் புரிந்து கொண்டால் போதும். அதே இறைவனிடம் நமக்கு வேண்டியதைக் பெறலாம்.

**மும்மலம்**

மாயாகாரியமாகிய தனு கரண புவன போகங்களைச் சிவபெருமான் ஆன்மாக்களுக்குக் கொடுப்பது எதன் பொருட்டு?

ஆன்மாக்களைப் பந்தித்த ஆணவ மலமுங் கன்ம மலமுமாகிய நோய்களைத் தீர்த்துச் சிவானந்தப் பெரும்பேற்றைக் கொடுக்கும் பொருட்டு. தனு கரண முதலியவைகளும் மலமன்றோ? மலமென்பது அழுக்கன்றோ? ஆணவமாகிய அழுக்கை, மாயா மலமாகிய அழுக்கினாலே எப்படிப் போக்கலாம்?

வண்ணான், கோடிப் புடவையிலே சாணியையும் உவர் மண்ணையும் பிசிறி, மிகக் கறுத்தது என்னும்படி செய்து, முன்னையதாகிய அழுக்கோடு பின்னையதாகிய அழுக்கையும் போக்கி, அப்புடைவையை மிக வெண்மையுடையதாகச் செய்வன் அது போலவே சிவபெருமான் ஆன்மாவினிடத்தே மாயா மலத்தைக் கூட்டி, அநாதி பந்தமாகிய ஆணவ மலத்தோடு ஆதிபந்தமாகிய மாயா மலத்தையும் போக்கி, அவ்வான்மாவைச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வுடையதாகச் செய்வார்.

**- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இயற்றிய**
**சைவவினாவிடை இரண்டாம் நூலில் இருந்து..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி நீராடல்

**செ. நிஷாந்தினி,**
உயர் தொழில் நுட்ப கல்லூரி,
யாழ்ப்பாணம்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

மார்கழி மாதத்தினை ஆன்மிக ரீதியாகப் பார்த்தோமேயானால் அனைத்து தெய்வங்களை வழிபடுவதற்கு மிகவும் சிறப்பான மாதமாக இருக்கின்றது. ஆனால் இம் மாதத்தில் திருமணம் நடத்தக்கூடாது என்றும், இம் மாதத்தினை பீடை மாதம் என்றுக் கூறுவதும் நமது மூதாதையர் தொடக்கம் இற்றை வரை வழக்கமாக உள்ளது. ஆனால் பீடு என்றால் உயர்ந்த பெருமை வாய்ந்த, கம்பீரமான என்ற பெருள்படும். இந்தப் பீடு என்பது தான் காலப்போக்கில் பீடை என்று மாறிவிட்டது ஆகவே மார்கழி மாதம் என்பது உயர்ந்த மாதமாக கூறப்படுகின்றது. இம் மாதத்தில் திருமணம் நடத்தக் கூடாது என்று சொல்கிறார்கள். அதற்கான காரணம் இம் மாதத்தில் உயிர் உருவாகும் தன்மை இல்லை அது முளைத்து வராது என்பதால் ஆகும்.

இம் மாதத்தில் அதிகாலையில் எழுந்து நீராடுதல் வேண்டும். மார்கழியில் அதிகாலையில் நாம் சுவாசிக்கும் ஒட்சிசனின் அளவு அதிகமாக இருக்கும். இது நம் உடலுக்கு நன்மையைத் தரும் இம் மாதத்தில் பெண்கள் அதிகாலை எழுந்து நீராடி வாசலில் மாக்கோலம் போடும் வழக்கமும் ஆண்களும், குழந்தைகளும் பஜனைக்கு செல்லவேண்டும். என்ற வழக்கத்தை அன்று தொட்டு இன்று வரை ஒரு வழக்கமாக வைத்திருக்கின்றனர்.

மார்கழி மாதத்தில் குளிர் அதிகமாக இருக்கும், இருந்தாலும் இம்மாதம் முழுக்க விடியற் காலை வேளையில் நீராடுவது போற்றப்படுகின்றது. பொழுது விடுவதற்கு முந்தைய அதிகாலை நேரத்தை பிரம்ம கூர்த்தம் என்றும் உஷத்காலம் என்று சொல்லப்படுகின்றது. இந்த நேரத்தில் நீராடுவது உடல் நலத்துக்கு நல்லது என்று சாஸ்திரம் கூறுகின்றது. பிரம்ம முகூர்த்தமாகிய இந்த தெய்வீக மாதமான மார்கழியில் வைகறை வேளையில் தெய்வங்கள் உலாவருவதாக ஐதீகம். அதனால் தான் இந்நாள்களில் அதிகாலையில் எழுந்து நீராடுதல் வேண்டும். இம் மாதத்தில் நீராடி இறைவழிபாட்டில் ஈடுபட்டால் வாழ்நாள் முழுவதும் சுகம் காணலாம் என்று ஞானநூல்கள் கூறுகின்றன.

மார்கழி நீராடலைப்பற்றி பல்வேறு பாடல்கள் நல் கருத்துக்கள் கூறுகின்றன. அவற்றுள் முக்கியமாக மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையும், ஆண்டாள் பாடிய திருப்பாவையையும் குறிப்பிடலாம். அந்த வகையில் ஆண்டாள் "மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர் போதுமினோ" என்று எல்லோரையும் அழைத்துக் கொண்டு நீராடப் போவது போலவே தொடங்குகிறது. அவரது திருப்பாவை "மழை வேண்டும் வேண்டும் என்ற வேண்டுகோள் மார்கழி நீராடலே" "வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும் மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்" என்கிறாள் ஆண்டாள் நாச்சியார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவையே மார்கழி நீராடலை நெடுகப் பாடகிறது. இத் திருவெம்பாவை சிவனுக்கு சிவதொண்டைப் புரிவதையே வரமாகக் கேட்கிறது. இதற்குச் சிறப்பாக விளங்குவது “எம்பாவாய்” என்ற தொடர் மொழி மணிக்கவாசகர் நீராடலைக் குறிப்பாக அன்றி நேர்முகமாய் விளக்கி புனைந்துரைத்து அருள்கிறார். மற்றும் நீராடல் என்பது பேரின்பத்தில் திளைத்துக் பெருமானோடு ஒன்றாகி நிலைப்பது என்று குறிக்கிறது ஆண்டவனையே “ஆர்த்த பிறவிதுயர் கொட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்” என்று குறிக்கிறார். திருவெம்பாவையின் கடைப்பாட்டில் கடவுளே எல்லாவற்றுக்கும் முதலும், முடிவும், யோகமும், அருளுமாகியிருக்கின்ற அழகினைப் பாடி அந்த இறைவனின் அழகிய திருவடி மலர்களே “போற்றியாம் மார்கழி நீராடும் பொன்மலர்கள்” என்று பாடி முடிக்கின்றார். இவ்வாறு மாணிக்கவாசகரும் ஆண்டாளும், மார்கழி நீராடல் கடவுள் நோன்பின் தூய்மைக்கோலம் என்ற புரட்சியைச் செய்தவர்கள்.

மார்கழி மாதக் குளிரில் இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்காமல் அதிகாலை வேளையில் எழுந்து சூரிய உதயத்திற்கு முன்பாக நீராடி, வீட்டுப்பூஜை அறையிலும், வீட்டு வாசலிலும் தீபம் ஏற்றி, கோலம் இட்டு, கோலத்தின் நடுவில் பறங்கிப் பூ வைத்து வழிபட்டால் வாழ்க்கையில் ஏற்படும் இடர்பாடுகளில் இருந்து மீண்டு வெற்றிப் பாதையை நோக்கிப் பயணிக்கலாம்.

### அரிவாட்டாய நாயனார்

சோழ நாட்டில் கணமங்கலம் என்னும் பதியில் வேளாண் குலத்தில் தோன்றியவர் அரிவாட்டாய நாயனார். செந்செல் செங்கீரை மாவடுத் திருவமுது சிவபெருமானுக்கு நாளும் வழங்குபவர். அவர் இயற்பெயர் தாயனார் என்பது. அவரது திருத்தொண்டின் மேன்மையை உலகறியத் தரவேண்டி இறைவன் வறுமையை நிலவச் செய்தார். எல்லாவற்றையும் இழந்த பின் நாயனார் கூலிக்கு நெல்லறுத்துத் தொண்டைத் தொடர்ந்தார். அவர் பெற்ற கூலி முழுமையாகச் செந்நெல் ஆனதால் அதை முழுமையாக இறைவனுக்கே அர்ப்பணித்துத் தாம் பட்டினி கிடந்தார். அடியவரின் அருமை மனைவியார் காய் கறிகளை ஆக்கி அவருக்கு உணவு கொடுப்பார்.

தமக்கு உணவில்லாத நாயனார் சிவனுக்குத் திருவமுது கொண்டு செல்கின்றார். மனைவி பஞ்சகௌவியம் கொண்டு பின்னே செல்கின்றார். தளர்வடைந்த நாயனார் வீழ்ந்துவிடப் போனவேளை, கலயத்தை மூடியிருந்த கையால் மனைவி தாங்கிக் கொள்கின்றார். ஆனாலும் சிவனுக்கான திருவமுதெல்லாஞ் சிதறின. “இனியான் ஏன் சிவனிடஞ் செல்லவேண்டும்” என்று வருந்திய நாயனார்தன் அரிவாளாற் குரல்வளையை அறுக்கத் தொடங்குகின்றார் அப்பொழுது நாயனார் கையைத் தடைசெய்த அம்மை யப்பன் விடைமேற் காட்சி கொடுத்தார். “நீ புரிந்த திருத்தொண்டு நன்று. இனி நீவிர் இருவீரும் எமது உலகிற்கு வருவீர்களாக” என்று பணித்து மறைந்தருளினார். இவர் முத்தியடைந்த திருநாள் **தைத் திருவாதிரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களது**
**(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**
**ஸ்தாபகர், சிவபூமி அறக்கட்டளை)**
**மணிவிழாவையொட்டிய**

# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது 2021

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களைக் கௌரவித்து பிறந்தநாள் அறநிதியச் சபையை உருவாக்கி புதியதோர் அறக்கட்டளையை நிறுவியுள்ளது. ஆண்டு தோறும் எம்மண்ணில் இளையதலைமுறைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஆற்றலாளர் இருவரைத் தெரிவுசெய்து அவர்களுக்கு சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்தல் என்ற திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். 2021 ஆண்டுக்கான ஆற்றலாளர் விருது பெறுபவர்களாக பின்வரும் இருவரை அறநிதியச்சபை கூடி தெரிவுசெய்துள்ளனர்.

**பேராசிரியர் கலாமதி முருகானந்தன்**
( மருத்துவபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன்**
(யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை)

## பேராசிரியர் திருமதி. கலாமதி முருகானந்தன் அவர்கள்
Professor Mrs. M. Kalamathy BVSc, MPhil, PhD

பேராசிரியர் திருமதி. கலாமதி முருகானந்தன் அவர்கள் 06-12-1972ல் அளவெட்டி கிராமத்தில் பிறந்தார். தந்தை புகழ்பூத்த அமரர் பண்டிதர் கனகர் நாகலிங்கம் அவர்கள் ஆவார். இவர் ஒரு பெரிய அறிஞர் என்பதோடு பல தமிழ் இலக்கண நூல்களை எழுதியுள்ளார். தாயார் அமரர் திருமதி. ராசம்மா நாகலிங்கம் அவர்கள். பெற்றோர் இருவரும் செட்டிச்சோலை, அளவெட்டியைச் சேர்ந்தவர்கள்.

பேராசிரியர் திருமதி. கலாமதி முருகானந்தன் ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியையும், அளவெட்டி அருணோதயா கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை தெல்லிப்பழை யா/ மகாஜனக் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இல: 22, நந்தாவில் வீதி கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் கணவன், பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார். கணவன் Dr. ஆறுமுகம் முருகானந்தன் அவர்கள் சிரேஷ்ட விரிவுரையாளராக ஒட்டுண்ணியியற்துறை, மருத்துவபீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுகிறார். மகள் செல்வி. நிவேதனா முருகானந்தன் யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையிலும் மகன் செல்வன். முருகானந்தன் வியாசன் யா/ சென். ஜோன்ஸ் கல்லூரியிலும் கல்வி பயிலுகின்றனர்.

பட்டப்படிப்பு கல்வியை விலங்கு மருத்துவ பீடம், பேராதனை பல்கலைக்கழகத்தில் யூலை 1995- டிசம்பர் 2000 வரை மேற்கொண்டார். தற்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் பேராசிரியராக கடமையாற்றுகிறார். இவர் யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் மருத்துவ பீட நுண்ணுயிரியல் துறையின் முதற் பேராசிரியர். அத்துடன் இவர் மருத்துவ பீடத்தின் மருத்துவ நுண்ணுயிரியல் துறையின் (Medical Microbiology) தலைவர் ஆவார்.

பட்டபின் மேற்படிப்புக்களின் விபரம்

1. முதுகலைமாணி (M Phil)- ஜனவரி 2007
2. கலாநிதி (PhD in Medical Virology)- மார்ச் 2017.

**பேராசிரியர் அவர்கள் கடமையாற்றிய பல்கலைக்கழகங்கள்:-**

பேராதனை பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராக யூன் 2001 தொடக்கம் யூன் 2004 வரை கடமையாற்றினார். பின்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராக யூலை 2004 தொடக்கம் மே 2008 வரை கடமையாற்றினார். தொடர்ந்து சிரேஷ்ட விரிவுரையாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மே 2008 தொடக்கம் டிசம்பர் 2019 வரை கடமையாற்றி தற்போது (டிசம்பர் 2019 தொடக்கம் இன்றுவரை) பேராசிரியர், மருத்துவ பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் என்ற உயர்ந்த பதவியை வகிக்கின்றார்.

**பெற்ற சிறப்பு பயிற்சி:**

2014ல் Medical virology பயிற்சி- கல்காரி பல்கலைக்கழகம், கனடாவில் பெற்றார். இப் பல்கலைக்கழகத்தில் நோய் ஏற்படுத்தும் வைரசுக்களை (Medical Virology) கண்டறிதல் தொடர்பான பயிற்சி பெற்றுள்ளார்.

**பெற்ற விருதுகள்:**

- 2004ல் முதற் பரிசு பெற்ற சிறந்த ஆய்வுக்கட்டுரைக்கான விருது- College of Microbiologist, Sri Lanka வழங்கியுள்ளது.
- National Research Council (NRC) Merit Award for Scientific Publication 2010
- National Research Council (NRC) Merit Award for Scientific Publication 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா மற்றும் தென்கிழக்காசியாவிலுள்ள Bill and Melinda Gates Foundation நிறுவனத்தால் 2015ல் இளம் கண்டுபிடிப்பாளர் (Young Investigator Award) விருது பெற்றுள்ளார்.

**ஆய்வுகள்**

நுண்ணுயிரிகள் சம்பந்தமான பல ஆய்வுகள் மற்றும் பல கட்டுரைகள் உள்நாட்டு, வெளிநாட்டு ஆராய்ச்சி மாநாடுகளில் விளக்கக் காட்சிப்படுத்தப்பட்டதுடன் (Presentation) பல உள்நாட்டு வெளிநாட்டு ஆராய்ச்சி இதழ்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. மருத்துவ பீடத்தில் M.Sc மற்றும் M.Phil கற்கை நெறி மாணவர்களுக்கு மேற்பார்வையாளராக கடமையாற்றுகின்றார்.

சமூகத்திற்கான மிக முக்கிய செயற்பாட்டில் (Service functions) பங்கெடுத்து வருகிறார். 2020ல் உலகளாவியரீதியில் Covid-19 தொற்று ஏற்பட்டு உலகெங்கும் மக்கள் பாதிக்கப்பட்டதைப் போன்று இலங்கையிலும் மிகப் பாரிய தொற்றாக இந்நோய் பரவியது யாவரும் அறிந்ததே. பொதுவாக நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் இவ்வாறான சர்வதேச நோய் பரம்பல் காலத்தில் சமூகத்தில் இறங்கி ஆராய்ச்சிகள் மூலமோ, நோய் தடுப்புக்களை ஏற்படுத்தியோ சேவை செய்ய வேண்டும் என்பது பல்கலைக்கழகங்களின் பொறுப்புக்களில் ஒன்றாகும்.

பேராசிரியர் திருமதி. கலாமதி முருகானந்தன் அவர்களும் அவரது கணவர் Dr. ஆறுமுகம் முருகானந்தன் அவர்களும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களாக இருந்ததால் பேராசிரியர் அவர்கள் தனது கணவரின் தலைமையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் Covid- 19 தொற்றைக் கண்டறிய RT-PCR பரிசோதனை ஆய்வுகூடத்தை தயார்படுத்தினார்கள். வேறு தொற்று நோய்கள் போலல்லாமல் Covid- 19 தொற்று இலகுவில் தொற்றக்கூடியது என்பதாலும், வீரியம் கூடியதாலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏற்ற முறையில் செய்து ஆய்வு கூடத்தை தயார்படுத்த அவர்களுக்கு கிட்டத்தட்ட ஒரு வார காலம் எடுத்தது. கடும் முயற்சியின் பின் ஏப்ரல் 2020ல் இருந்து Covid- 19 தொற்றாளர்களின் மாதிரிகளில் இருந்து கொரோனா வைரசுகளின் RT-PCR பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. இதன் மூலம் பேராசிரியர் அவர்கள் சுகாதார துறைக்கு மிகமுக்கிய பங்கை இன்று வரை வழங்கிக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் அவர்கள் நுண்ணுயிரியல் சமூகம், சிறீலங்கா யாழ்ப்பாண கிளை (Sri Lankan Society for Microbiology (SSM), Jaffna Chapter) யின் உபதலைவராக இருக்கிறார். இந்நிறுவனம் யாழ்ப்பாண கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் க.பொ.த உயர்தர உயிரியல் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும், "நுண்ணுயிர் கொல்லிகளுக்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட நுண்ணங்கிகளின் உருவாக்கமும் அதனை கட்டுப்படுத்தும் வழிமுறைகளும்" என்ற தலைப்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் (Emergence of Antibiotic Resistance) ஒன்றை 2020ஆம் ஆண்டில் இருந்து நடாத்திக் கொண்டிருக்கின்றது. இச் செயற்பாடு பாடசாலை மட்டத்தில் நுண்ணுயிர் தொற்று தொடர்பான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவை வழங்கி எதிர் காலத்தில் இளம் தலைமுறை ஆற்றலாளர்களை தோற்றுவிப்பதற்கு முன்னோடியாக இருக்கும் என்பது மனநிறைவாக உள்ளது.

இன்றைய தினம் செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களின் அறுபதாவது அகவைப் பூர்த்தியில் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது 2021ஐப் பேராசிரியர் திருமதி. கலாமதி முருகானந்தன் அவர்களுக்கு வழங்கி கௌரவிப்பதில் பெருமகிழ்வடைகிறோம். இவர் மேன்மேலும் பல விருதுகள் பெற்று சமூகத்திற்கும் கல்விக்கும் சேவையாற்ற எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவியை வணங்கி வாழ்த்துகிறோம்.

## நரம்பியல் சத்திர சிகிச்சை
## நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன் அவர்கள்
## Dr. S. P. Athiththan MBBS, MRCS, MD (Sur).

நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன் அவர்கள் 20-08-1972 ல் கலட்டி கரணவாய் கிழக்கு, கரவெட்டியில் பிறந்தார். தந்தை திரு. சின்னத்தம்பி பொன்னம்பலம் அவர்கள். தாயார் திருமதி. நாகரத்தினம் பொன்னம்பலம் அவர்கள். பெற்றோர் இருவரும் கரவெட்டியைச் சேர்ந்தவர்கள்.

நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன் அவர்கள் இலக்கம் 11, பியுகனன் வீதி, கொழும்பு 04ல் மனைவி, மகளுடன் வாழ்ந்து வருகிறார். மனைவி பேராசிரியர் லோகினி விஜயேந்திரன் ஆதித்தன் அவர்கள். இவர் யா/ உடுவில் மகளிர் கல்லூரி பழைய மாணவி ஆவார்.

பேராசிரியர் லோகினி விஜயேந்திரன் ஆதித்தன் அவர்கள் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் உயிரிரசாயன துறை பேராசிரியராக பதவி வகிக்கின்றார். மகள் சனாதனி ஆதித்தன் கொழும்பு மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் கல்வி கற்கிறார்.

நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை யா/ நாவலர் இந்து தமிழ்கலவன் பாடசாலையில் கற்று இடைநிலைக் கல்வி மற்றும் உயர்தரக்கல்வியை யா/ ஹாட்லி கல்லூரியில் கற்றார். இடைநிலைக் கல்வியில் சில மாதங்கள் யா/ விக்னேஸ்வராக் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியின் இறுதிப் பகுதியை நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியிலும் கற்றார்.

எமது இளைய தலைமுறை ஆற்றலாளர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வைத்தியதுறைக்கான கற்கை நெறியை மேற்கொண்டு 1999ல் பட்டப்படிப்பை நிறைவு செய்தார்.

**பட்டமேற்படிப்புக்கள் விபரம்**

01. MRCS பட்டமேற்படிப்பை 2010ல் நிறைவு செய்தார்.
02. MD (Surgery) பட்டமேற்படிப்பை 2014ல் நிறைவு செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடமையாற்றிய வைத்தியசாலைகள் விபரம்.**

பொது வைத்தியசாலை, நீர் கொழும்பு 2000 - 2001
கிராமிய வைத்தியசாலை, உடப்பு 2001 - 2003
கொழும்பு தேசிய வைத்தியசாலை
நரம்பியல் சத்திரசிகிச்சைப் பிரிவு 2003- 2010
பட்டப்படிப்பு பயிற்சி 2014- 2016
றோயல் ஸ்ரோக் பல்கலைக்கழக வைத்தியசாலை 2016- 2018
யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை 2018-இன்றுவரை

பல மருத்துவ முகாம்களில் பங்குபற்றியுள்ளார். குறிப்பாக உடப்பு, மலையகம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட முகாம்களில் பங்குபற்றியதுடன் சுனாமி முகாமிலும் தொண்டாற்றியுள்ளார்.

**பங்குபற்றிய முக்கியமான ஆய்வுகள்/ கருத்தரங்குகள்**

1. லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் தலையில் ஏற்படும் காயங்களுக்கு மண்டை ஓட்டு தீவிர சிகிச்சையின் பயன்பாடு தொடர்பான கருத்தரங்கு
2. தலையில் ஏற்படும் இரத்தக்கசிவுகளுக்கு மருந்துகளின் பயன்
3. உள்ளூரில், வெளிநாடுகளில் நடைபெற்ற நரம்பியல், முள்ளந்தண்டு சம்பந்தமான கருத்தரங்குகள் இவர் நரம்பியல் சத்திரசிகிச்சையில் விசேட சாதனைகள் ஆற்றியுள்ளார் என்பது சிறப்பாக குறிப்பிடத்தக்கது.

பல வகை புதிய நரம்பியல் சிகிச்சை முறைகளை மேலதிகாரியுடன் இணைந்து அறிமுகப்படுத்தியமையை குறிப்பிடலாம். இதற்காக சிக்கலான சத்திர சிகிச்சைகளை செய்வதற்கு பயிற்சி பெற்று மூளையில் தண்டுப்பகுதியில் சத்திர சிகிச்சை மேற்கொண்டிருப்பதுடன் **மண்டை ஓடுகளை சேமித்து மீள் பயன்படுத்தும் பொறிமுறையை** (Cranioplasty bone flap storage system) **இலங்கையில் அறிமுகம் செய்துள்ளார்.**

நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன் அவர்கள் பாடசாலை நாட்களில் இருந்து இயல் இசை நாடகத்தில் மிகுந்த ஆர்வம் உடையவர். பாடசாலை நாட்களில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க மாணவர் அணி இணைப்பாளராக இருந்துள்ளார். போதைப்பொருள் எதிர்ப்பு மாணவர் அமைப்பின் செயலாளர், விஞ்ஞான மன்றம் தலைவர், இந்து மன்றம் பதிப்பாசிரியர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

இந்த ஆளுமை பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்தது. கொழும்பு பல்கலைக்கழக இந்துமன்ற தலைவராகவும் தமிழ்மன்ற நிர்வாக சபை உறுப்பினராகவும் நாடகமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தார். அத்துடன் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட பட்டிமன்றக் குழுவின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

மேலும் பல்வேறு மருத்துவ சத்திர சிகிச்சை, நரம்பியல் சத்திர சிகிச்சை அமைப்புக்களில் உறுப்பினராகவுள்ளார். அத்துடன் ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு கிளை உபதலைவராகவும் உள்ளார். நிறைவாக,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இளைய தலைமுறை ஆற்றலாளரின் எதிர்கால இலக்கு/ சிந்தனை எமது சமூகத்திற்கு குறிப்பாக வடபகுதி வாழ் மக்களுக்கு உரிய நரம்பியல் சத்திர சிகிச்சையை சிறப்பாக வழங்குவதாகும்.

இதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் விபத்து பிரிவில் 04ம் மாடியில் உருவாகி வரும் நரம்பியல் சத்திர சிகிச்சைப் பிரிவை வடமாகாணத்தில் உரிய முறையில் செயற்பட ஆவன செய்வதன் மூலம் நரம்பியல் சத்திர சிகிச்சை முறைகளை அடுத்த படி நிலைக்கு உயர்த்த உதவுவது இவருடைய எதிர்கால இலக்காகும் என்பது போற்றத்தக்கது.

இன்றைய தினம் செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களின் அறுபதாவது அகவைப் பூர்த்தியில் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது 2021ஐப் நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன் அவர்களுக்கு வழங்கி கௌரவிப்பதில் பெருமகிழ்வடைகிறோம். இவர் மேன்மேலும் பல விருதுகள் பெற்று சமூகத்திற்கு சேவையாற்ற எல்லாம்வல்ல ஸ்ரீ துர்க்காதேவியை வணங்கி வாழ்த்துகிறோம்.

## எப்போதும் இத்தேசம் மறவாதன்னாய்

**சிவத்தமிழின் செல்வியென உலகம் போற்ற**
**செம்மைமிகு சைவத்தின் பெருமை காத்தாள்**
**தவத்திலுயர் துறவியெனத் தக்கோர் போற்ற**
**தனித்தவளும் அருளோடு தரணி காத்தாள்**
**பவத்தில் உயர் அறங்களெலாம் தேங்கி நிற்க**
**பாவத்தின் சுமை குறைத்துப் பண்பு காத்தாள்**
**அவமதனின் நிழல்கூட மற்றோர் தம்மை**
**அணுகாது துணைசெய்து அன்பு காத்தாள்.**

**பண்டிதையாய்த் தமிழ்கற்றுப் பலரும் போற்ற**
**பண்பான மாணவரை ஆக்கித் தந்து**
**தொண்டதனால் ஆசிரியப் பணியிலோங்கி**
**துலங்குகிற அறிவதனாற் பெருமை கொண்டாள்**
**தண்டமிழில் சொற்பெருக்கை ஆற்றி நல்ல**
**தையல் இவள் தமிழ்போல வருமோ? என்று**
**கண்டவரும் கேட்டவரும் கைகள் கூப்பி**
**கடவுளென வணங்கிடவே உயர்வு கொண்டாள்.**

**கலாநிதியாம் விருதளித்துக் கற்றோர் தாமும்**
**கைகூப்பி உனைமதித்த காட்சி என்னே!**
**நிலாவிலுமோர் மறுவுண்டு. நிந்தன் வாழ்வில்**
**நிழலாயும் மறுவில்லா நேர்மை என்னே!**
**உலாவிநிதம் துர்க்கையையும் காத்துநின்ற**
**ஓய்வில்லா உனதுழைப்பின் பெருமை என்னே!**
**இலாதின்று போனாலும் தாயே! உன்னை**
**எப்போதும் இத்தேசம் மறவாதன்னாய்!**

**- கம்பவாரிதி இ. ஜெயராஜ்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை, சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி J.P அவர்களின் 97வது பிறந்தநாள் அறக்கொடை விழாவில் சிவத்தமிழ் விருது பெறும் சான்றோர்கள் - 2022

## வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை



பேராசிரியர் பொன்னுத்துரை பாலசுந்தரம்பிள்ளையவர்கள் பண்டிதர் பொன்னுத்துரையின் மகனாக கரம்பொன், ஊர்காவற்துறையில் 29.04.1941ல் பிறந்து வேலணையைத் தனது வசிப்பிடமாக்கினார். இவர் தனது ஆரம்பக் கல்வியை கரம்பொன் சண்முகநாத வித்தியாசாலையிலும் ஊர்காவற்துறை புனித அந்தோனியர் கல்லூரியிலும் பெற்றார். இடைநிலைக் கல்வியை கற்பதற்காக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரில் இணைந்து கொண்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியைப் பெற்று 1965ல் கலைமாணிப் பட்டதாரியானார். இங்கிலாந்தின் டரம் பல்கலைக்கழகத்தில் (University of Durham) பட்டமேற்கல்வியைத் தொடர்ந்து 1972ல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

பேராசிரியர் 1965ல் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகக் கல்விப் பணியில் உள்ளார். 18.10.1965ல் புவியியல் துறைக்கான உதவி விரிவுரையாளராக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டார். தொடர்ந்து 1972ல் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்று 1980 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். பின்னர் புவியியல்ப் பேராசிரியராக 01.09.1080 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இணைந்து சேவையாற்றத் தொடங்கினார் 30.09.2006 வரை சிரேஷ்ட பேராசிரியராக இருந்த இவர் 01.10.2006 தொடக்கம் வாழ்நாள் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றார்.

கல்விப் புலத்திலிருந்த பேராசிரியரவர்கள் பல்கலைக்கழக நிர்வாக பதவிகள் பலவற்றை அலங்கரித்தவர். 1981ல் இருந்து பத்து வருடங்கள் புவியியல்துறைத் தலைவராகவும் 1991ல் இருந்து 06 வருடங்கள் கலைப்பீடாதிபதியாகவும் 1996ல் இருந்து 06 வருடங்களுக்கு மேலாக துணை வேந்தராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சேவையாற்றியுள்ளார். நீண்ட காலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக இருந்துள்ளார். இலங்கைப் பல்கலைக்கழக துணைவேந்தர்களின் தலைவராகவும் (2000) இருந்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியரவர்கள் கலைப்பீடாதிபதியாக இருந்தபோது 1991ல் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் பிரிவை ஆரம்பித்து பல்கலைக்கழக அனுமதி கிடையாதோரும் பட்டப்படிப்பைத் தொடர வாய்ப்பளித்தார். மேலும் இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் யாப்பு விதிகளைச் சீர்திருத்தி 1992ல் நுண்கலைப் பட்டப்படிப்புக்களை வழங்கும் நிறுவனமாக்கினார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் புறநிலைப் படிப்புக்கள் அலகை ஆரம்பித்து பல்கலைக் கழகத்தை சமூகத்துடன் இணைத்தார். சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறி, விளையாட்டுத்துறை டிப்புளோமா ஆகியவற்றை அறிமுகப்படுத்தினார்.

பேராசிரியர் அவர்கள் துணைவேந்தராக இருந்த காலத்தில் உயர் பட்டப்படிப்புக்கள் பீடம், முகாமைத்துவ வர்த்தக பீடம் ஆகிய இருபீடங்களையும் உருவாக்கினார். பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழாவை மிகச் சிறப்பாக கொண்டாடினார். கலைப் பீடத்தில் ஊடக மையத்தை ஆரம்பித்து ஊடக பட்டப்படிப்புக்கள் கற்கைநெறி உருவாதலுக்கு வழிகோலினார்.

பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழகங்களின் ஒன்றிய Academic fellowship ஐ (புலமைப் பரிசில்) பெற்றுள்ளார். பல, பிரதேசம் சார்ந்த, ஆய்வுக் கட்டுரைகளையும் ஆக்கங்களையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டுள்ளதுடன் பல்வேறு ஆய்வு மாநாடுகளிலும் சமர்பித்துள்ளார். இவர் ஆற்றிய பன்முகப்பணிக்காக யாழ் மாநாகர சபை 2019ல் “யாழ் விருது” வழங்கி கௌரவித்துள்ளது.

பல்கலைக்கழகம் தவிர்ந்த சமுதாயம் சார்ந்த அமைப்புக்கள், திட்டங்கள் பலவற்றிலும் பங்கெடுத்துள்ளார். வடக்குப்பரப்பு மீள் அபிவிருத்தி அதிகார சபையின் இயக்குனர்களிலொருவராகவும் அரசகரும மொழிகள் ஆணைக்குழு, உள்ளூராட்சி வட்டார எல்லை மீள் நிர்ணய குழு, மாகாண எல்லை நிர்ணய மீள்பரிசீலனைக் குழு, தேர்தல் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழு, ஆகியவற்றின் அங்கத்தவராகவும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், சமாதானத்திற்கு நல்லெண்ணத்திற்குமான மக்கள் மன்றம் என்பவற்றின் தலைவராகவும் இருந்து அரும்பணியாற்றியுள்ளார்.

வடக்குப்பரப்பு மீள் அபிவிருத்தி அதிகார சபையினூடாக வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, நல்லை ஆதீனம் மற்றும் பல பாடசாலைகள், கோயில்கள் என்பவற்றின் மீள்கட்டுமாணத்திற்கு உதவினார். இடம்பெயர்ந்து மருதனார்மடத்தில் இயங்கிய மகாஜனக் கல்லூரியை சொந்த இடத்தில் இயங்க வைப்பதற்கு மயிலிட்டி பாஸ்கரன் அவர்களுடன் இணைந்து செயற்பட்டு வெற்றி கண்டார்.

வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் உயர்கல்வி சேவைகளையும் ஏனைய பன்முகப் பணிகளையும் பாராட்டி அன்னை சிவத்தமிழ்செல்வியின் 97வது பிறந்தநாளை முன்னிட்டு 07.01.2022ல் நடைபெறும் அறக்கொடை விழாவில் “சிவத்தமிழ்” விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்



முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் முருகேசன் பாக்கிய அம்பாள் தம்பதிகளுக்கு 14ம் திகதி ஐப்பசி மாதம் 1943 ம் ஆண்டில், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறையில் பிறந்தார். ஆரம்ப, இடைநிலைக் கல்வியை தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், உயர்கல்வியை பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர் கல்லூரிலும் கற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்று வருகை விரிவுரையாளராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பணிபுரிந்தார்.

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் நூலகவியல் பட்டயக் கற்கையைக் கற்றதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் முனைவர் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். ஸ்கொத்லாந்திலுள்ள எடின்பரோ பல்கலைக்கழகத்தில் கணவரின் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுத் தரவுத்தேட்டத் துணையாளராகப் பணியாற்றினார்.

யாழ் முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றியதுடன் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் வருகை விரிவுரையாளராகவும் இருந்துள்ளார். ஜப்பானினுள்ள கக்சுயின் பல்கலைக்கழகத்தில் ஆய்வாளராகவும், விரிவுரையாளராகவும் மொழி இலக்கிய பீடத்தில் வருகை ஆய்வுப் பேராசிரியராகவும் சேவை புரிந்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை விரிவுரையாளராகவும், பட்டப்பின் படிப்புகள் பீட விரிவுரையாளராகவும் பணி செய்துள்ளார்.

சமய சம்பந்தமான பத்துக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளதுடன் கொழும்பு, இலண்டன், மலேசியா, இந்தியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நிகழ்ந்த சமய, சித்தாந்த மாநாடுகளிலும், கருத்தரங்களிலும் பங்குபற்றி பல ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். இந்துசாதனம், இந்துஒளி, நல்லைக்குமரன் மலர், சிவத்தமிழ், அன்புநெறி போன்ற பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் தொடர் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், திருக்குறள் ஒப்பீட்டு இலக்கியம், மொழிபெயர்ப்பு இலக்கியம் தொடர்பான இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் இரு நூறிற்கும் அதிகமாக தமிழ், ஆங்கிலம், ஜப்பானிய மொழிகளில் எழுதியுள்ளார்.

தமிழாராய்ச்சி மாநாடு, தமிழியல் மாநாடு, தமிழாசிரியர் மாநாடு மன்யோசு இலக்கிய மாநாடு, பாரதி மாநாடு, திருக்குறள் மாநாடு, சிலப்பதிகார மாநாடு போன்ற பல உலக மாநாடுகளில் பங்கு பற்றியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி, தினகரன், தினக்குரல், ஈழநாடு, வலம்புரி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளில் எழுதியுள்ளதுடன் பல ஆலயங்களின் கும்பாபிடேக மலர்களிலும் சிறப்புக் கட்டுரைகள் எழுதியுள்ளார். புலம்பெயர் நாடுகளில் வாழும் சைவ சிறார்களுக்காக சைவசமய பாட நூல்கள் தரம் ஒன்று தொடக்கம் தரம் பதினொன்று வரை எழுதியுள்ளார்.

இலங்கை, மலேசியா, இலண்டன், ஜேர்மனி, சுவிஸ்சர்லாந்து, டென்மார்க், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, கனடா, நோர்வே, தென்ஆபிரிக்கா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலுள்ள கோவில்களிலும், சைவமன்றங்களிலும் பல சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.

இலங்கை வானொலி, கனேடிய தமிழ் வானொலி, ஓம் தொலைக்காட்சி, Capital தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் ஊடாகவும் பல அருளுரைகள் வழங்கியுள்ளார். சைவவித்தியா விருத்திச் சங்கம் நடத்தும் சைவச்சிறுவர் இல்லத் திட்டப் பணிப்பாளராகவும் நிதிப்பொறுப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

முப்பத்தைந்திற்கு மேற்பட்ட நூல்களை தனியாகவும், 06 நூல்களை கணவருடன் இணைந்தும், தொகுப்பு ஆக்கங்களாக 09 நூல்களும் எழுதியுள்ளார்.

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் இலக்கிய சேவைகளைப் உவந்து பாராட்டி அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் 97வது பிறந்தநாளை முன்னிட்டு நடைபெறும் அறக்கொடை விழாவில் "சிவத்தமிழ்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

## திரு. அப்பாத்துரை பஞ்சலிங்கம்



திரு. பஞ்சலிங்கம் அவர்கள் அப்பாத்துரைக்கும், இரத்தினம்மாவுக்கும் அருந்தவப் புதல்வனாக 08 தை 1936ல் கொக்குவிலில் பிறந்தார். ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்று ஆசிரியராகப் பணிபுரிந்தார். மிகச் சிறந்த அதிபர் என அனைவராலும் போற்றப்பட்டு, ஆளுமை நிறைந்த மாணவ சமுதாயத்தினை உருவாக்கியவர். கையெழுத்துப் பிரதி எழுதுதல், வாசிப்புப் பழக்கத்தினை மாணவர்களுக்கு உருவாக்குதல் போன்றவற்றை மிகவும்வினைத்திறனுடன் செயற்படுத்தியவர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபராக கடமையாற்றிய காலத்தில் பாடசாலையின் அபிவிருத்திக்காக ஏறத்தாழ ஒரு ஏக்கர் காணியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொடுத்ததுடன் அதில் அழகான கட்டிடங்கள் எழவும் வழிசமைத்தவர். அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அனுசரனையுடன் இந்தியாவில் பெற்ற பயிற்சியில் கற்றுக்கொண்ட விடயங்களை செயலுருவத்துக்குக் கொண்டுவந்து ஆளுமை மிக்க மாணவர் சமுகத்தினை கட்டியெழுப்பினார்.

திரு. பஞ்சலிங்கம் அவர்கள் தமது அனுபவப் பட்டறிவை கட்டுரைகளாக எழுதியிருந்தார். இக்கட்டுரைகள் இவர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறும்போது யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மாணவர்களால் தொகுக்கப்பட்டு நூலாக வெளியிடப்பட்டமை மனங்கொள்ளத்தக்கது.

அரசபணியிலிருந்து ஓய்வு பெற்ற பின், தொழில்நுட்பக் கல்லூரியில் வருகை விரிவுரையாளராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலமொழிக் கற்பித்தல் அலகில் வருகைப் போதனாசிரியராகவும், பலாலி ஆசிரியர் கலாசாலையில் வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் தலைவராகவும் சேவை புரிந்துள்ளார்.

தன்னுடைய அனுபவங்கள் தொடர்பாகவும் அன்றைய கல்வி முறைகள், பாடசாலைகளின் நிலைமைகள், எதிர் கொள்ளும் சவால்கள், மாணவர் ஆசிரியர் உறவுமுறை பற்றியும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், சிறப்பு மலர்களிலும் பல ஆக்கங்களை எழுதியுள்ளார். அதிபர் பஞ்சலிங்கம் அவர்களின் ஆளுமைத்திறன், நிர்வாகக் கட்டமைப்பு, கல்விச் சிந்தனைகள் எல்லாம் மிக உயர்ந்தவை என பல அறிஞர்கள் கூறியிருக்கிறனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவராகவும், வடமாகாண அதிபர் சங்கத்தின் தலைவராகவும், யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் தலைவராகவும், யாழ்ப்பாண பாடசாலைகள், துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவராகவும், யாழ்ப்பாணம் ரோட்டறிக் கழகத்தின் தலைவராகவும், உரும்பிராய் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் தலைவராகவும், உரும்பிராய் ஞானவைரவர் கோயில் பரிபாலனசபைத் தலைவராகவும், யாழ்ப்பாண மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சபையின் தலைவராகவும், இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புச் சபையின் உறுப்பினராகவும் சேவை ஆற்றியுள்ளார்.

உரும்பிராய் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினூடாக இவர் செய்த சேவைகள் அளப்பரியன. பின்தங்கிய பதினைந்து பாடசாலைகளை தொடர்ச்சியாக சில வருடங்கள் பல உதவிகள் புரிந்து முன்னேற்றியுள்ளார்.

அரசசேவையில் இருந்து இளைப்பாறிய பின் இவர் முன்பள்ளிக் கல்வித்துறையை முன்னோற்றுவதில் முனைப்பாக செயற்பட்டார். இதன் விளைவாக உரும்பிராய் Kids Park எனப்படும். முன்பள்ளியை உரும்பிராய் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினூடாக நிறுவி மாதிரி முள்பள்ளியாக வளர்த்தெடுப்பதில் வெற்றி கண்டவர். பொருத்தமான கட்டிட, தளபாட வசதிகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பொருத்தமான கல்விமுறைகள் ஆங்கில கல்வியை உரியவழிகளில் உட்புகுத்தல் என முன்பள்ளிக் கல்வியை விருத்தி செய்வதன் மூலம் அடுத்த சந்ததியின் ஆளுமை விருத்திக்கு அத்திவாரமிட்டவர்.

ஓய்வுக்குப் பின்னர் 25 ஆண்டுகளாக பல்வேறு தளங்களில் பல சமய, சமூக அமைப்புக்களின் தலைவராக, ஆலோசகராக, வழிகாட்டியாக செயற்பட்டமைக்காகவும், வன்னி பெருநிலப் பரப்பில் பல முன்பள்ளிகள், அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கும், தொடர்ச்சியாக இயங்குவதற்கும், ஆற்றிய பணிகளுக்காகவும், பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கும் பல நூற்றக்கணக்கான நலிந்த குடும்பங்களுக்கும் சிறந்த தொண்டாற்றியதற்காகவும், வைச மகாசபையினர் "அன்பே சிவம்" என்ற விருதை வழங்கிக் கௌரவித்தனர்.

திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள் பாடசாலைக்கல்வித் துறையிலும் முன்பள்ளிக்கல்வித் துறையிலும் ஆற்றிய சீரிய பணிகளைக் மதித்து அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் 97வது பிறந்தநாளை முன்னிட்டு 07.01.2022 நடைபெறும் அறக்கொடை விழாவில் "சிவத்தமிழ்" விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.

## கலாபூஷணம் சண்முகம் அருளானந்தம்



திரு. சண்முகம் அருளானந்தம் அவர்கள், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஆலங்கேணி என்னுமிடத்தில் 1937ம் ஆண்டு தை மாதம் 30ம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை ஆலங்கேணி றோ. க. த. பாடசாலையிலும், உயர் கல்வியை மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலத்திலும் கற்றார்.

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று ஆசிரியராகக் கடமையாற்றி பேராதனைக் பல்கலைக்கழகத்தில் கலைப் பட்டதாரியாகி, இலக்கியத்தில் முதுமாணிப்பட்டமும், பின்னர் கலாநிதிப் பட்டமும் பெற்றார். இலங்கைக் கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையிலும் சித்தி பெற்றுள்ளார்.

ஆசிரியராக, அதிபராக, வட்டாரக்கல்வி அதிகாரியாக, வவுனியா மாவட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளராக, வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின், மாகாண கல்வி திணைக்களத்தின் மேலதிகக் கல்வி பணிப்பாளராக பணியாற்றி, இளைப்பாறிய பின்னர் சில திட்டங்களுக்குக் கல்வி ஆலோசகராகப் பணிபுரிந்துள்ளார்.

மாணவ ஆசிரியராக கண்டி இந்து சீனியர் வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியை ஆரம்பித்த இவர் மலையகத்தின் உன்னாஸ்கிரி தமிழ் வித்தியாலயம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலஹா தமிழ் வித்தியாலயம் போன்ற அதிகஸ்ட பிரதேச பாடசாலைகளிலும் திருகோணமலை சுங்காங்குழி கலைமகள் வித்தியாசாலையிலும் சேவையைத் தொடர்ந்தவர். வவுனியா மாவட்டத்தில் சேவையில் இருந்தபோது ஏறத்தாழ 65 புதிய பாடசாலைகளை உருவாக்கியவர். இவர் சேவையாற்றிய கலஹா தமிழ் வித்தியாலயம் தற்போது இராமகிருஷ்ணா கல்லூரியாக உள்ளது. அங்கு இவருடைய பெயரில் உள்ள மண்டபம் பதுமெருகூட்டப்பட்டு உள்ளது.

கேணிப்பித்தன் என்ற புனைபெயரில் சிறுவர்களுக்குப் பாடல்கள், கதைகள், கட்டுரைகள், நாவல்கள், என்பனவும் வளர்ந்தோருக்கான கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகம், தமிழியல் ஆய்வு நூல்கள் என்பவற்றையும் எழுதியுள்ளார். இவற்றைத் தவிர தினகரன், சுதந்திரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளிலும், விவேகி, வெற்றிமணி போன்ற சஞ்சிகைகளிலும் பல ஆக்கங்களை எழுதியுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாண தமிழ்மொழித் தின விழாமலர் ஆசிரியராக 03 ஆண்டுகள் பணிபுரிந்து, தரமான மலர்களைப் பிரசுரித்துள்ளார். பன்மைத்துவ ஆற்றல் கொண்ட மண்வாசைன பேசும் பல சிறுகதைகளை எழுதிய படைப்பாளி. அவருடைய கதை சொல்லும் முறை சிறுவர்களைக் கவர்ந்துள்ளது. அதிக சிறுவர் இலக்கியங்களை எழுதியுள்ளதுடன் வவுனியா இலக்கிய வட்டத்தினரால் “சிறுவர் இலக்கிய வித்தகர்” என்னும் சிறப்பு பட்டத்தையும் பெற்றுள்ளார். வடக்குக் கிழக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகியவை வழங்கும் இலக்கிய விருதுகள் 15 ற்கு மேல் பெற்றுள்ளார். கலாபூஷணம் ஆளுனர் விருது போன்ற உயர்விருதுகளுக்குச் சொந்தக்காரன்.

“வாக்கில் இனிமை வேண்டும்” “கனவு மெய்ப்பட வேண்டும்” நெருங்கின பொருள் கைகூட வேண்டும்” “நினைவு நல்லது வேண்டும்” “நல்லதோர் வீணை” போன்ற நூல்கள் அகில இலங்கை சாகித்திய மண்டலம் வழங்கும் சாகித்திய விருதை இவருக்கு பெற்றுக் கொடுத்தன. “கிராமிய பாடல்கள்” “இலங்கை கிராமிய விளையாட்டுக்கள்” “அனர்த்த முகாமைத்துவம்: ஓர் அனுபவ அணுகுமுறை” ஆகிய நூல்களுக்கு மாகாணமட்ட சாகித்திய விருது கிடைத்துள்ளது.

கல்வி அமைச்சின் தேசிய நூலக அபிவிருத்தி அதிகார சபையால் “அற்புதமான வானம்” “சின்னத் தேவதைகள்” “கண்ணனும் இராமனும்” “சின்னச் சின்ன சிறுகதைகள்” “சந்திரன் கதை” போன்ற நூல்கள் வாங்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டன.

சமூக அக்கறையுடன் தான் வாழும் சூழலைத் தன் சிறுகதைகளில் வெளிப்படுத்தி மண் சார்ந்த மண் வாசனை மிக்க எழுத்துக்குச் சொந்தக்காரன். ஈழத்துத் தமிழ் சிறுகதை வரலாற்றில் இவரது பங்களிப்பு காத்திரமானது. பலதுறை சார்ந்து நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியதுடன், 84 வயது கடந்தும் எழுத்துலகில் தனித்துவமொழியால் தன்னைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் ஆளுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ச. அருளானந்தம் அவர்களின் கல்வி, கலை, இலக்கிய சேவைகளைப் மதித்துப் பாராட்டி அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் 97வது பிறந்தநாளை முன்னிட்டு நடைபெறும் அறக்கொடை விழாவில் “சிவத்தமிழ்” விருது வழங்கி கௌரவிப்பதில் பெருவகை அடைகின்றோம்.

## திருமதி. சாந்தினி சிவநேசன்



புகழ்பூத்த நாட்டுக் கூத்துக் கலைஞர் ஏரம்பு அண்ணாவியாரின் பேர்த்தியாக நாட்டியக்கலைஞர் கலைச்செல்வன் சுப்பையா அவர்களின் புதல்வியாக சாந்தினி அவர்கள் 03.01.1952ல் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், உயர்கல்வியை வேம்படி மகளிர் கல்லூரியிலும் கற்றார்.

பரதநாட்டியத்தை சென்னையில் பத்மஸ்ரீ. அடையார். K இலட்சுமணனிடம், அடையார். K இராமாராவ், ஸ்ரீமதி. நாகமணி ஸ்ரீனிவாசராவ் ஆகியோரிடமும் முறையாகப் பயின்று பட்டம் பெற்றார். கதகளி நடனத்தை பத்மபூஷண் குருஜி கோபிநாத் அவர்களிடமும் திரு. சங்கரப்பிள்ளை அவர்களிடமும் முறையாகப் பயின்றார்.

உடுவில் மகளிர் கல்லூரியில் தற்காலிக ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கி, யா/இராமநாதன் கல்லூரியில் நிரந்தர ஆசிரியராகப் பணியாற்றினார். இலங்கை கல்வி நிர்வாக சேவை தரத்தில் சித்திபெற்று, பதவியுயர்வு பெற்று, கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். தற்போது யாழ்/இராமநாதன் நுண்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்திலும், இடைவரவு விரிவுரையாளராகப் பணி புரிந்துவருகின்றார்.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இணையவழி ஊடாக கற்பித்தல் சேவையை தொடர்ந்தும் செய்துவருகிறார். க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) செயன்முறைப் பரீட்சைத் தேர்வாளராகவும், வட இலங்கைச் சங்கீத சபையில் ஆசிரியர் பிரதம தேர்வாளராகவும் தொலைக்கல்வி பாடநெறி ஆசிரியர் தரத்திற்கு விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். வடக்கு கிழக்கு மாகாண அமைச்சில் ஆசிரிய ஆலோசகர்களுக்குக் கருத்தரங்குகளும், செயலமர்வுகளும் நிகழ்த்தியதுடன், வட இலங்கை சங்கீதசபை, தேசிய கல்வி நிறுவனம், கல்வித் திணைக்களம் என்பவற்றின் ஆதரவுடன் பல கருத்தரங்களும் விரிவுரையுடன் கூடிய செயலமர்வுகளும் செய்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாரால் ஆரம்பிக்கப்பட்ட "கலாபவனம்" என்ற நடனப்பள்ளியைத் தொடர்ந்து நிகழ்த்தி மாணவர்களுக்குப் பயிற்சியளித்து வருகிறார். பயிற்சி பெற்றவர்கள் நுண்கலைமாணி, கலாவித்தகர், டிப்புளோமா, கலைமாணி பட்டம் பெற்ற ஆசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும், உதவிக் கல்விப் பணியாளர்களாகவும், ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றுகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் பரீட்சகராக கடமையாற்றியுள்ளார்.

நிதியுதவிக் கச்சேரிகள், கலை விழாக்கள், இசை விழாக்கள், ஆண்டு விழாக்கள், நவராத்திரி விழாக்கள், கும்பாபிடேக விழா போன்ற இன்னோரன்ன விழாக்களில் மாணவர்களைப் பயிற்றுவித்து பல நடன உருப்படிகளையும், நாட்டிய நாடகங்களையும் தயாரித்து மேடையேற்றியுள்ளார். இருபத்தைந்திற்கு மேற்பட்ட மாணவர்கள் இவரது நெறியாள்கையில் அரங்கேற்றம் நிகழ்த்தியுள்ளனர்.

நல்லாசிரியர் விருது தலைக்கோல் விருது உட்பட பல விருதுகளையும், பலகௌரவங்களையும் பெற்றுக்கொண்டதுடன், நர்த்தன திலகம், கலைக்கேசரி, தேசபந்து, கலாபூசணம், சாதனையாளர், சக்திரத்தினா, நிருத்திய சூடாமணி ஆச்சார்யா போன்ற பல பட்டங்களையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

நடனம் சம்பந்தமான பல கட்டுரைகளையும், விளக்கங்களையும், பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு எழுதியுள்ளதுடன் தொலைக்காட்சிக்கு பேட்டிகளும் வழங்கியுள்ளார். புலம்பெயர் நாடுகளில் பரதநாட்டிய பரீட்சைக்கான பாடத்திட்டம் மீள்உருவாக்கம் செய்யும் குழுவில் அங்கத்தவராக இருந்து பாடத்திட்டம், பரீட்சைக்கான, செயன்முறை வினா, அறிமுக வினா உருவாக்கத்திற்கு உதவிபுரிந்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகள் அவுஸ்திரேலியா, லண்டன், கனடா போன்ற நாடுகளில் நடைபெறும் பரதநாட்டிய அரங்கேற்றங்களுக்கும் பிரதமவிருந்தினராக, சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைப்பீட வெளிவாரி உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு தனது சேவையை வழங்கி வருகின்றார்.

திருமதி சாந்தினி சிவநேசன் அவர்களின் பணிகளைப் பாராட்டி அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் 97வது பிறந்தநாளை மன்னிட்டு 07.01.2022ல் நடைபெறும் அறக்கொடை விழாவில் "சிவத்தமிழ்" விருது வழங்கி கௌரவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை விரதம்

செ. ஹரீசாளினீ,
திருமகள் அழுத்தகம், சுன்னாகம்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

மார்கழி மாதத்தில், பெண்கள் நோற்கும் விரதங்களில் முக்கியமானது மார்கழி நோன்பாகும். மார்கழியில் நோற்பதால் "மார்கழி நோன்பு" என்றும், கன்னிப்பெண்களாலும், "பாவை" அமைத்து நோற்கப்படுவதாலும் "பாவை நோன்பு" என்றும் அழைக்கப்பெறுகின்றது.

கன்னியர்கள் பனி நிறைந்த மார்கழி மாதத்தில் பொழுது புலர்வதன் முன் எழுந்து, மற்ற தோழியர்களையும் (பெண்களையும்) எழுப்பி, "கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே" என அழைத்து ஆற்றங்கரை சென்று, "சீதப் புனல் ஆடி சிற்றம்பலம் பாடி" ஆலயம் சென்று "விண்ணுக் கொருமருந்தை வேத விழிப்பொருளைக் கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துள்ளம் உருகி உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம் அன்னவரே எம்கணவர் ஆக" அருள் தருவாய் என வேண்டுவர்.

மணிவாசகர் திருவண்ணாமலையில் கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்து ஒருவரையொருவர் துயிலெழுப்பி கூட்டமாகச் சென்று பொய்கையில் நீராடி இறைவன் புகழ்பாடி வழிபடுவதை திருவெம்பாவைப் பாடல்களில் குறிப்பிடுகின்றார். இதனைச் சங்க நூல்கள் "தைந்நீராடல்"என்றும் "அம்பா ஆடல்" என்றும் கூறுகின்றது.

திருவெம்பாவை நோன்பு என்பது மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரத்துக்கு ஒன்பது நாட்களுக்கு முன் தொடங்கி இந்துக்களால் கடைப்பிடிக்கப்படும் நோன்பாகும். இந்த திருவெம்பாவை பாடல்களுடன், திருப்பள்ளியெழுச்சி பதிகத்தின் பாடல்களையும் இணைத்து மார்கழி மாதத்தில் பாடுவதை சைவர்கள் மரபாக கொண்டுள்ளார்கள். திருவெம்பாவை இருபது பாடல்களைக் கொண்டது. முதல் எட்டு பாடல்கள் சிவபெருமானின் புகழ்களைப் பாடியபடி நீராடச் செல்லுதலைக் குறிப்பது. ஒன்பதாவது பாடல் சிவபெருமானிடம் தங்கள் வேண்டுதல்களைக் கூறுவதாகவும், பத்தாவது பாடல் நீராடுதலையும் குறிப்பன

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதி, சிவலோகன், தில்லைச் சிற்றம்பலத்து ஈசன், அத்தன், ஆனந்தன் அமுதன், விண்ணுக்கு ஒரு மருந்து, வேத விழுப்பொருள், சிவன், முன்னைப் பழம், தீயாடும் கூத்தன் என்று பலவாறு இறைவனைக் குறித்துப் பாடி, நீராடி சிவபெருமானிடம் அடியார்கள் வேண்டுவதை "திருவெம்பாவை" விளக்குகிறது.

மணிவாசகப் பெருமான் பாடியருளிய திருவெம்பாவையும், ஆண்டாள் அருளிய திருப்பாவையும் மார்கழி நோன்பை அடிப்படையாகக் கொண்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி நோன்பு, சங்க காலம் முதலே தமிழரிடம் இருந்துவரும் நோன்பாகும் என்பது பரிபாடல், நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்னும் சங்ககால நூல்களால் அறியலாம்.

மணமாகாத பெண்கள் இந்த நோன்பை நோற்கின்றனர். "அம்பா ஆடல்"என்பதற்குத் தாயுடன் ஆடுதல் என்று பொருள். பாவை போல ஒரு பெண் பிள்ளையின்-தாய் கடவுளின் வடிவை அமைத்து வணங்கி வழிப்பட்டுப் பின் நீராடுவர். பாவை நோன்பு நோற்பவர் விரும்பத்தக்க சிறந்த கணவனைப் பெறுவர் என்பது நம்பிக்கை. இது நாட்டில் மழை பெய்ய நோற்கும் நோன்பு என்று கூட கொண்டனர். கற்பே மழைத் தரும் என்று நம்பிய தமிழுலகம் இக்கன்னியர் நோன்பை மழைக்கென நோற்கும் நோன்பாகவும் கருதினர். பின்னர் இந்த இரண்டையும் வேறு என பிரிப்பதும் வழக்கமாகிவிட்டது. பெண்கள் அழகை பெற விரும்பினால் செய்யும் நோன்பு ஒன்றை விஷ்ணு தருமோத்த புராணம் கூறுகிறது.

மாணிக்கவாசகர் சிவபெருமான் மீது பாடியருளிய "திருவெம்பாவை"யும் பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒரே பெண்மணியானவரான ஆண்டாள் பாடியருளிய பாவைப்பாட்டாகிய "திருப்பாவை"யும் பாவைப்பாட்டுக்களில் சிறந்தவையாகும். கன்னிப் பெண்கள் தோழியரை நீராட வரும்படி அழைக்கும் போதும், தோழியருடன் நீராடும் போதும் இப் பாவைப் பாடல்களை பாடி ஆடுகின்றனர்.

மார்கழி மாத திருவாதிரையை இறுதி நாளாகக் கொண்டு, பத்துத் திங்கள் திருவெம்பாவை நோன்பு நோற்கப்படுகின்றது. சில சிவாலயங்களில் பகல் திருவிழாவும், ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவும் அன்று பின் இரவு அதிகாலை வேளையில் நடராஜப் பெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றுப் பத்தாம் நாள் சூரிய உதயத்தில் தரிசனம் நடைபெறும். இவ் விரதத்தைக் கடைப்பிடிப்போர் திருவாதிரை தினம் உபவாசம் இருந்து மறுநாள் பாரணஞ் செய்வர்.

மார்கழி மாதத்தில் தில்லைச் சிதம்பரத்தில் கோவில் கொண்டருளிய நடராஜப் பெருமானைத் தரிசிக்க தேவர்கள் ஒன்றுகூடுவதாக ஐதீகம் உண்டு. தேவர்களுக்கு இம்மாதம் அதிகாலைப் பொழுதாகும். இக்காலத்தில் (வைகறையில்) சுவாமி தரிசனம் செய்வது உத்தமமாகக் கருதப்படுகின்றது. அக்காலத்தைப் பிரம்ம முகூர்த்தம் என்றும் அழைப்பர்.

சைவர்களுக்கு மார்கழி மாதம் திருவாதிரை திருவெம்பாவை நோன்பினாலும், விநாயகர் சஷ்டி விரதத்தாலும் பெருமை பெறுகின்றது. சைவர்களுக்கு மட்டுமல்லாமல் வைஷ்ணவர்களுக்கும் இம்மாதம் சிறப்புக்குரியதாகும். சுவர்க்க வாயிலில் ஏகாதசி விரதம் இம்மாத்திலேயே கடைப்பிடிக்கப் பெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நோக்கில் கலாநிதி. ஆறு. திருமுருகன்
## (செஞ்சொற்செல்வரின் மணிவிழாவில் ஆற்றிய வாழ்த்துரை)

**சிவஞானச்சுடர் கேசினி. கோணேஸ்வரன்,**
அவுஸ்ரேலியா.

எல்லாம் வல்ல துர்க்காதேவியின் பாதார விந்தங்களைப் பணிந்து, இங்கு கூடியிருக்கும் அந்தணப் பெருமக்களுக்கும், சமயப் பெரியார்கட்கும், விழா நாயகன் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய பெரியவர்களிற்கும், சபையில் உள்ள பெரியோர்கட்கும், பெண்களிற்கும் மாணவர்களிற்கும் காலை வணக்கம்.

எங்களில் பலரைப் போல் எம்மைப்பற்றியும் எமது குடும்பத்தைப் பற்றியும் மட்டும் சிந்திக்காமல் தான் வாழுகின்ற சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கின்ற மாபெரும் மனிதரின் மணிவிழாவில் நாம் அனைவரும் கூடியிருக்கிறோம். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற தொடருக்கு இணங்க ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்து, அதிபராகி, பல சமூக, சமய நிறுவனங்களில் தொண்டாற்றி, சிவபூமி அறக்கட்டளையை ஆரம்பித்து, அதனூடாக தனித்துவமான நிறைவான பணிகள் பல செய்து, துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் தலைவர் பொறுப்பையேற்று நிறையத் திருப்பணிகள் செய்து, கோபுரங்கள் அமைத்து, பன்னிரு திருமுறைகள், புராணங்கள் என்பவற்றைப் பதிப்பித்து வெளியிட்டு "உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்" பற்றியும் செந்தமிழ், தமிழர் பற்றியும், உலகெலாம் சென்று கேட்டார் பிணிக்கும் கையவாய் சொற்பொழிவாற்றி, அனைவரினதும் ஆதரவைப்பெற்று நலிந்தோரை அரவணைக்கும் ஆற்றலை எவ்வாறு பெற்றார்?

செஞ்சொற்செல்வர் அவர்கள் அவுஸ்திரேலியா வந்திருந்த போதில், உலக சைவப் பேரவையினருடன கலந்துரையாடலில் இதற்கான காரணத்தைக் குறிப்பிட்டிருந்தார். இராணுவத்தினரால் பிடி பட்டு, மரணவாயில் வரை சென்று, மீண்டு வந்தவராக, இத்தனை வேதனைகளுக்கும் வலிகளுக்கும் பின்னர், தான் ஏன் காப்பாற்றப்பட்டேன் என்று சிந்தித்து, தன்னுடைய மிகுதி வாழ்நாளை நலிந்தோர்க்குப் பயன்பட வாழவேண்டும் என முடிவு எடுத்துக் கொண்டார். முதுகில் ஏற்பட்ட வடுவை சத்திர சிகிச்சை மூலம் மாற்றக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தும் அதனை மறுத்து "புண் சுமந்த மேனியனாய்" என்றும் எப்போதும் நலிந்தோருக்கு உதவும் தனது குறிக்கோளை நினைவு கொள்கின்றார்.

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதத்தில் அபயகரம் (உதவும் கரங்கள்) என்ற நிறுவனத்தினரின் அழைப்பின் பேரில், கலாநிதி. ஆறு. திருமுருகன் ஐயா அவர்கள் அவுஸ்திரேலியாவிற்கு வருவார்கள். (கடந்த இரண்டு வருடங்களாக கொவிட் தொற்று காரணமாக வரவில்லை)

இந்த அபயகர நிறுவனத்தினர், கலைநிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து, (அநேகமாக பரதநாட்டியமும், கர்நாடக சங்கீதமும்), அதிலே பெறப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானத்தின் ஒரு பகுதியை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இயங்கும் மகளிர் இல்லத்திற்கு வழங்குவார்கள். விழா மேடையிலேயே செஞ்சொற்செல்வரிடம் பணம் வழங்கப்படும். இந் நிகழ்விற்காக அவுஸ்ரேலியாவிற்கு வருகை தரும் கலாநிதி. ஆறு. திருமுருகன் ஐயா அவர்கள் சிட்னி, கன்பரா, மெல்பேர்ண் போன்ற இடங்களில் நிகழும் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுவார்.

சிட்னி முருகன் கோவில் கலாசார மண்டபத்தில், சைவ மன்றத்தினர் ஏற்பாடு செய்யும் சிறப்புச் சொற்பொழிவுகள் இரண்டு அல்லது மூன்று தினங்கள் நடைபெறும். செஞ்சொற்செல்வரின் சொற்பொழிவைக் கேட்க எல்லா வயதினரும் வருகை தருவர். உலக சைவப் பேரவை உறுப்பினர்கள், கலாநிதி. ஆறு. திருமுருகன் ஐயா அவர்களுடன் சந்திப்பை ஏற்படுத்தி, அவருடைய செயற்திட்டங்கள் பற்றி அறிந்து கொள்வர்.

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினரும், தங்களது ஒலிபரப்புச் சேவையில், கலாநிதி. ஆறு திருமுருகன் ஐயாவை நேர்காணல் செய்து ஒலிபரப்புச் செய்வதுடன், இரவு விருந்தொன்றை நிகழ்த்தி அதில் சேகரிக்கப்படும் பணத்தையும் ஐயாவின் அறப்பணிகளுக்கு வழங்குவர். பொறியியலாளர் திரு. வை. ஈழலிங்கம் தலைமையிலான குழுவினர் இந் நிகழ்வினை ஒழுங்கு செய்வர்.

நவாலியூர்ச் சோமசுந்தர புலவரின் பேரன் டாக்டர் பாரதி தலைமையில் நிகழும் “தமிழ் வளர்த்த சான்றோர் விழா” நிகழ்விலும் கலந்து, தமிழ்ச்சான்றோர் ஒருவர் பற்றி சிறப்பான உரை நிகழ்த்துவார். தமிழர் செறிந்து வாழும் பிரதேசங்களிளுள்ள, மூத்த பிரசைகள் சங்கங்களிற்குச் சென்று அவர்கள் கேட்கும் தலைப்புகளில் உரையாற்றி அவர்களை ஆற்றுப்படுத்துவார்.

மெல்பேர்ண் சைவசித்தாந்த மையம், கன்பரா சைவ அன்பர்கள் என அன்பர்களின் அழைப்பையேற்று, அங்குள்ள மக்களின் விருப்பத்திற்கேற்ப சொற்பொழிவுகள் ஆற்றுவார். இலங்கையில் எவ்வாறு பகல், இரவு பாராது பல மணித்தியாலங்கள் தொண்டு செய்கிறாரோ, அவ்வாறே அவுஸ்திரேலியாவிலும் குறிப்பாக வார இறுதி நாட்களில் காலை, மதியம், இரவு என நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, ஓய்வு ஒழிச்சல் இல்லாது சொற்பொழிவுகள் ஆற்றுவார்.

புலம்பெயர்ந்து பல்கலாசார நாடுகளில் வாழும் சைவ இளைஞர் யுவதிகளுக்கு, செஞ்சொற்செல்வரின் சொற்பொழிவுகளால், சைவ சமய தத்துவங்களைப் பற்றிய தெளிவு பிறக்கின்றது. அவர்கள் இலங்கைக்கு வரும் போது ஐயா பன்னிருதிருமுறைகள், புராணப் புத்தகங்கள் முதலியவற்றை அன்பளிப்பாக கொடுத்து மேலும் அவர்களை ஆன்மீக வாழ்வில் முன்னேற்றமடைய வழிவகுக்கிறார்.

உலகெங்கிலுமுள்ள புலம்பெயர் மக்களுக்குச் சரியான சமய அறிவையும் தமிழர் வரலாற்றையும், புகட்டுவதுடன் அவர்கள் வழங்கும் அன்பளிப்புக்களை கொண்டு ஈழத்தில் நலியுற்றவர்களையும் வாழவைக்கின்றார். கலாநிதி ஆறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகன் அவர்கள் முதியோர் இல்லத்திலிருக்கும் அத்தனை பேருக்கும் செல்ல மகன். பல முதியோர் தங்களின் இறுதிக்கிரியைகளை ஐயாவே செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றனர். மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கு தாயும் தந்தையும் ஆனவர். அவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கி, அவரவர்க்கு ஏற்ற தொழில் பெற்றுக் கொடுத்து நல்ல திருமணம் செய்து வைத்து, வீடும் நகையும் கொடுத்து தாயும் தந்தையுமாகிறார். இத்தனை பேரையும் நிம்மதியாக வாழ வைத்து அவர்களின் ஆசிகளும், வாழ்த்துகளும் பெற்று தன்னுடைய ஆன்ம சக்தியைப் பெருக்கிக் கொள்கிறார்.

சாதாரணமாக ஒருவரால் ஒரு துறையில் அல்லது இரண்டு துறைகளில் மிகமிகச் சிறந்து விளங்க முடியும். எவ்வாறு கை வைத்த துறைகளில் எல்லாம் மிகச்சிறந்தவராக ஐயாவால் விளங்க முடிகிறது? நிறைந்த இறைநம்பிக்கை, வாக்கும், செயலும், உள்ளமும் எந்நேரமும் ஒன்றிணைந்த தொழிற்பாடு, பகலிரவு பாராத அயராத உழைப்பு, நுண்மாண் நுழைபுல சிந்தனையாற்றல் என்பவை மிகமிக முக்கியமான காரணங்கள்.

இன்றைய தினத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் எங்களால் இயன்ற அளவில் எம் சமுதாயத்திலுள்ள நலிந்தோர்க்கு உதவவேண்டும் என்னும் தீர்மானத்தை எடுத்துக்கொள்வோம்.

சிறந்த சொற்பொழிவாளர், சமூக சேவையாளர், ஆளுமை நிறைந்த நிர்வாகி, ஆவணக் காப்பாளர், மனித நேயமுடையவர், கடின உழைப்பாளர், பத்திராதிபர், ஆலோசகர் என பல்வேறுபட்ட துறைகளில் முத்திரை பதித்திருக்கும் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துச் சொல்வதில் பெருமகிழ்வு அடைகிறேன். பல்லாண்டு பல்லாண்டு உடல் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து நலிந்தோரைக் காக்க எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளைப் பிராத்திக்கிறேன்.

**'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு'**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழும் தெய்வத்தை வாழ்த்தி வணங்கி அமர்கிறேன்.

**வாயிலார் நாயனார்**

தொண்டை நாட்டில் திருமயிலைப் பதியில் வேளாளர் குடியிற் பிறந்தவர் வாயிலார் நாயனார். தமது உள்ளத்தையே சிவன் கோயிலாகக் கண்டவர். அறிவை விளக்காக்கி ஆனந்த நீராட்டி அன்பாம் அமுதைப் படைத்து இறைவன் முன் ஞானபூசை செய்தவர். அவ்வழி சிவன் திருவடிப்பேறு பெற்றவர்.

இவர் முத்தியடைந்த திருநாள் **மார்கழி ரேவதி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்தில் அறிவியல் சிந்தனைகள்

**கலாநிதி. திருமதி. விக்னேஸ்வரன் பவநேசன்,**
முதுநிலை விரிவுரையாளர்,
இந்துநாகரிகத் துறை, யாழ். பல்கலைக்கழகம்.

தமிழில் எழுந்த பக்தி இலக்கியங்களின் வரிசையில் திருவாசகத்திற்குத் தனித்தவமான சிறப்பு உள்ளது. பக்திப் பாவலர்கள் வரிசையில் மணிவாசகர் தலைமைத் தகுதி பெற்றவர் என்பது அனுபூதிமான்களின் அனுபவ வாக்கு. "தேன்" எனப் பாராட்டத்தக்க திருவாசகப் பாடல்கள் மூலம் தமிழுக்கும் பக்தியின் மொழி என்ற பாராட்டை துறைசார் வல்லுநர்களிடம் பெற்றுத் தந்தவர் மணிவாசகர். அவர் தமது பாடல்களின் வழி வெளிப்படுத்திய இறையனுபவமே இத்தகைய நிலைக்கான அடிப்படை அம்சம் அவர் இறைவனிடம் புலப்படுத்தி நின்ற பக்தி நிலை ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் மூவரும் பாடியருளிய தமிழ் தேவாரம் எனப்படும். மணிவாசகர் பாடியருளியது திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு நூல்களுமாகும். பன்னிரு திருமுறையில் எட்டாவதாக வைத்து எண்ணப்படுவது. "எட்டு" என்பது இறைவனுடைய திருவடியைப் பற்றுதற்குரிய ஒரு பண்பு "உணர்ந்து எட்டே" என்பார் திருமூலர். திருவாசகம் என்ற பெயர் திருவுடைய சொற்களால் ஆகிய அருள்நூல் எனப் பொருள்படும். இந்நூல் உருகாத உள்ளத்தையும் உருக்கிப் பசுத்துவங் கெடுத்து பதித்துவம் அருளவல்லது. ஆதலால் இது செந்தமிழுக்கு அன்பு மறையாய்ப் போற்றப்படுகின்றது. திருவாசகத்தைத் தேன் எனக் கூறுதல் மரபு. தேன் உடற்பிணிக்கு மருந்தாதல் போல் திருவாசகம் உயிர்ப்பிணிக்கு மருந்தாகின்றது.

**தேவர் குறளும் திருநான்மறை முடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை**
**திருவாசகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவாசக மென்றுணர்** எனவும்

**தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி**
**அல்லறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசக மென்னுந் தேன்**

எனவும் வரும் பாடல் அடிகளால் இந்நூலின் சிறப்புத் தெளிவாகின்றது. ஓதுவார் உள்ளத்தை உருக்கவைக்கும் பேராற்றல் மிக்கது. நாடு, மொழி, இனத்தால் வேறுபட்டவரையும் உருகவைக்கும் "திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்றும் கூறுவர். மணிவாசகருடைய காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர் அறிஞர்கள்.

"மணிவாசகருடைய வாய் திருவாய். அதுவும் ஒப்புயர்வற்ற மலர்வாய். அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் தேன் என்றார். அதைப் போல வாசகம் என்றால் மிக நுட்பமாகப் பரவும் தன்மையது. மலரிவிருந்து நுட்பமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுவது மணம். அதற்கு வாசம் என்னும் பெயர். வாசம் என்றால் வாழ்கின்ற இடம் என்றும் ஒரு பொருள். மணம் என்று மற்றொரு பொருளும் உண்டு. மாணிக்கவாசகர் வாயிலிருந்து வெளிவந்த மொழிகள் வாழ்கின்ற மொழிகள். இதனால் இதற்கு அடைசேர்த்துத் "திருவாசகம்" என்று பெயரிட்டனர். என்று தவத்திரு தேமொழியார் சுவாமிகள் குறிப்பிடும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய அரிய தெய்வீகப் பாடல்களை இயற்றிய மணிவாசகரின் அறிவியற் சிந்தனைகள் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். மணிவாசகர் தம் கல்வி, அனுபவம், அறிவு எனும் இவற்றைத் துணையாகக் கொண்டு அமைச்சர் பதவியை அடைந்தவர். வாரியார் சுவாமிகள் கூறியது போல் "பிறப்பின் உரிமையால் வருவது அரச பதவி. அறிவின் திறத்தால் வருவது அமைச்சர் பதவி ஆகும்." இவருக்கு வந்த அமைச்சர் பதவி என்பது அறிவின் திறத்தாலே வந்த பதவி என்பதில் ஐயமில்லை.

ஆதிமுதல் அந்தம்வரை அனைத்தையும் அகக்காட்சியிலே காணக்கூடிய பேரறிவு நிலையே ஞானம். எல்லா நிகழ்ச்சிகளின் அடிநாதமாக அடித்தளமாக அமைந்திருக்கும் ஒன்றே பிரம்மம் என்று உணரப்படுகின்றது. பிரம்மத்தோடு தன்னை இணைத்துக்கொள்ளும் விஞ்ஞானி அறிவு விழிப்பும், மெய்ஞ்ஞானி ஆன்ம விழிப்பும் அடைகிறான். புரியாத பல புதிர்களுக்கு விடையினை விஞ்ஞானியும் மெய்ஞ்ஞானியும் பெறுகின்றனர். புலன்களால் பொருள்களை உணரும் பொழுது மன அலைச்சூழல் மிகவும் விரைவாக இயங்குகிறது. அந்த விரைவு அகத்தவச் சாதனையால் குறைக்கும் நுண்ணிய நிலையில் தான் மறை பொருள்களை உணரமுடியும். இந்நிலையை அல்ஃபாரைம் (Alpharhytham) என்பர். இந்த அல்ஃபாரைம் என்ற அதிர்வு நிலைக்கு மனத்தைக் கொண்டு சென்றோமாயின் வான மண்டலத்திலுள்ள எண்ண அலைகளையெல்லாம் தானாகவே வாங்கிக்கொள்ளக்கூடிய வலிமை மனத்திற்கு உண்டாகிறது என்றும் சிற்றறிவானது பேரறிவோடு ஒன்றி நிற்கும் யோகம் கைகூடுகிறது என்றும் சித்தர்கள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆன்ம ஞானம் கைவரப்பெற்ற நிலையில் தனக்குக் கிட்டிய இப்பேற்றை

**நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே**
**காட்டாதன வெல்லாங் காட்டிப் பின்னும்**
**கேளாதன வெல்லாங் கேட்பித் தென்னை**

(திருச்சதகம், பாடல் எண்.28)

என்ற பாடலில் மணிவாசகர் விளக்கியுள்ளார். திருவம்மானைப் பகுதியிலும் இதனையே குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

மாணிக்கவாசகர் விஞ்ஞான அறிவைப் பெற்றுத் திகழ்ந்தார். அவருடைய அறிவியல் அறிவு பக்திக்கு இடையூறாக அமையவில்லை. எடுத்துக்காட்டாக திருஅண்டப்பகுதியைக் குறிப்பிடலாம். இத் திருவண்டப்பகுதியை மாணிக்கவாசகர் இணைக்குறள் ஆசிரியப்பாவில் பாடியுள்ளார். இணைக்குறள் ஆசிரியப்பா என்பது ஆசிரியப்பாவின் பொது விலக்கணம் பெற்று ஈற்றடியும் முதலடியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிரப் பிற அடிகள் இரண்டும் பலவும் குறளடியானும் சிந்தடியானும் வருவது. மாணிக்கவாசகர் இயற்கை வெளியிலே காணப்படுகின்ற அசைவுகளையெல்லாம் இறைவனாகவே கண்டார். அவ்வாறு கண்டதை மிக அழகாகத் திருவண்டப் பகுதியில் உரைக்கின்றார்.

**அண்டப்பகுதியின் உண்டப் பிறக்கம்**
**அளப்பருந்த தன்மை வளப்பெரும் காட்சி**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன**
**இல்நுழைகதிரின் துன் அனுப்புரையச்**
**சிறிய ஆகப் பெரியோன்.'**

(திருவாசகம் - 3)

இப்பாடலின் அண்டமாகிய பேருலகப் பகுதிகளின் உருண்டை வடிவமும் அவற்றின் எல்லையற்ற தன்மையும், வளப்பமும் ஒன்றுக் கொன்று மேலாக நின்று நூற்றொரு கோடிக்கு மிக்கன. வீட்டின் துறைவழிக் காணும் கதிர் அணுக்களை ஒத்து (அண்டங்கள்) சிறியனவென்று சொல்லும்படி பெரியோனாக விரிந்தும் பரந்தும் இறைவன் உள்ளான் எனக் குறிப்பிடுகிறார். இங்கு காணப்படும் சில அறிவியல் உண்மைகளை எடுத்துக்கொண்டு அவை தற்கால அறிவியல் புதுமைகளுடன் எவ்வளவிற்கு ஒத்துள்ளன என்பதை நோக்கினால், "அண்டப்பகுதி" என மாணிக்கவாசகர் கூறியதை இன்று Uniiverse என்று கூறுகிறோம். அதிலுள்ள உண்டைப் பிறக்கம் என்பதை Galaxy என்று கூறுகிறோம். நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன என்பதை Expanding Universe என்கின்றோம். இப்பாடலில், அண்டமாகிய பெரும்பகுதியில் நூறுகோடியின் மேலான உண்டைகள் பெருக்கமுற்று விரிந்தன என்கிறார் மணிவாசகர்.

பருமைக்கு உதாரணமாக இவ்வண்டத்தைக் கூறி இறைவன் இதனைவிடப் பெரியோன் ஆதலின் அவன் பெருமையை நோக்க இவ்வண்டமும் அணுவை ஒப்பச் சிறியதாய் விட்டது என்கிறார். எவ்வாறு அண்டத்தைப் பற்றி அறிந்திருந்தாரோ அதைப்போலவே அணுவைப்பற்றியும் அறிந்திருந்தார். இதனை

**'விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க**
**அணுத்தரும் தன்மைஇலையோன் காண்க'**

என்று குறிப்பிடுகின்றார். இதில் விரிந்த உலகமெல்லாம் கலந்து நிற்பவன். மிக நுண்மையான பொருளிலும் வியக்கத்தக்க நுண்மையாய் நின்று இயக்குவோன் காண்க என்கிறார்.

மாணிக்கவாசகர் அணுக்களின் திரட்சி பற்றியும் குறிப்பிட்டுள்ளார். எல்லாப் பொருட்களும் அணுக்களால் ஆனவை. ஒரு பொருளின் மிகச் சிறிய வடிவமே அணுவாகும். இவற்றின் கூட்டியக்கத்தாலேயே ஒவ்வொரு பொருளும் மதிக்கப்படுகின்றன. அதுவே அப்பொருளின் தன்மையாகிவிடுகின்றது. இதனை

**'அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு**
**மதியில் தண்மை வைத்தோன் திண்டிறல்**
**தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்**
**வானிற் கலப்பு வைத்தோன் மேதகு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காலின் ஊக்கங் கண்டோன் நிழல் திகழ்**
**நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட**
**மண்ணில் திண்மை வைத்தோன்'**

(திருவாசகம்- திருவண்டப்பகுதி வரிகள் 20-6)

என்ற அடிகள் விளக்குகின்றன. திருவாசகத்தில் கருவியல் (Embryology) பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. டார்வினின் பரிணாமக் கொள்கை பற்றிக் குறிப்பிட்டவர் அரிய மானிடப் பிறவி மாதந்தோறும் அடையும் வளர்ச்சி நிலையையும் விரிவாகப் பாடியுள்ள திறம் போற்றத்தக்கது. ஆண், பெண் சேர்க்கையால் உருவாவதே கருவாகும். அவ்வாறு உருவான நிலையிலிருந்து ஒவ்வொரு மாதமும் எத்தகைய பெருந்தடைகளைக் கடக்கின்றது என்பதை,

**'மானுடப்பிறப்பினுள் மாதா உதரத்து**
**ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்**
**ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்**
**இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்**
**மும்மதிதன்னுள் அம்மதம் பிழைத்தும்**
**அஞ்சுதிங்களின் முஞ்சுதல் பிழைத்தும்**
**ஆறு திங்களின் ஊறவர் பிழைத்தும்**
**ஏழு திங்களின் தாழ்புவி பிழைத்தும்**
**எட்டுத் திங்களின் கட்டமும் பிழைத்தும்**
**ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்து'**

(போற்றித் திருவகவல் வரிகள் 14-25)

என்ற அடிகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. நுண்ணியல் கருவிகொண்டு கைதேர்ந்த கருவியல் மருத்துவர் பார்ப்பதைப் போன்று துல்லியமாகக் கணக்கிட்டுக் கூறியுள்ளார்.

இப்பரந்த உலகைத் தோற்றுவித்த இறைவன் அதில் வாழ உயிர்களையும் தோற்றுவித்தான். புல்பூண்டில் தொடங்கி மனிதனில் நிறைவுறும் இவ்வுயிர்க்குலம் முழுவதும் தொடர் கொண்டே நிலைபெற்று வருகின்றது. திருவாசகத்தின் தொடக்கப்பகுதியான சிவபுராணத்தில் ஓரறிவு உயிரிலிருந்து படிப்படியாக முன்னேறி ஆறறிவு உயிருக்கு வந்து, பேயாய்க் கணங்களால் ஆன பிறகு ஞானியாகிறார். அவ்வாறு ஆனபின்பு உச்சிக்கே போய்விட்டார். அங்கிருந்து பார்க்கும் போது தான் எந்தப் பிறவியிலிருந்து இந்தப் பிறவிக்கு வந்தோம் என்பதை உணர்கிறார். ஓரறிவில் இருந்து ஆறறிவுவரை வளர்ந்த நிலையைக் காட்டுகிறார். இதனை

**'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்**
**எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்**
**மெய்யே உன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்'**

(திருவாசகம் 1 - சிவபுராணம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அடிகளால் விளங்குகிறார். அணுவின் அமைப்பும் அண்டங்களின் அமைப்பும் ஒப்புடையனவாக உள்ளன என அறிவியலாளர் ஆய்வுகளால் மெய்ப்பித்துள்ளனர். இவ்வாறு அறிவியலறிஞர் ஆய்வுகள் மூலம் கண்டவற்றையே ஞானச் செல்வர்கள் உள்ளுணர்வால் அநுபவமாகக் கண்டுள்ளனர். இவ்வகையில் அறிவியலறிஞர்களின் அனுபவவியலும் ஞானச் செல்வர்களின் அனுபவவியலும் ஓரிடத்தில் சந்திப்பதை நாம் அறியமுடிகின்றது. அணுக் கோயிலின் முன்நிற்கும் விஞ்ஞானிகளும் அண்டக் கோயிலின் முன்நிற்கும் மெய்ஞ்ஞானிகளும் ஒரே உண்மையைத்தான் காண்கின்றனர்.

ஊழியின் முடிவில் இந்த அகிலம் முழுவதும் அணுத்தத்துவமாக மாறும் என்பதையும், மீண்டும் படைப்புக்காலத்தில் அது அண்டங்களாக மாறும் என்பதையும் மெய்யுணர்வாளர் விளக்குகின்றனர். இந்த உண்மையினையே இன்றைய அறிவியலறிஞார்கள் புலனுணர்வைப் பன்மடங்கு பெருக்கும் கருவிகளைக் கொண்டு விளக்குகின்றனர். நாம் காணும் பொருள்கள்யாவும் அணுத்திரளைகளேயன்றி வேறொன்றுமில்லை என்பதை எடுத்துரைத்தனர். இதனையே அம்பலத்தில் ஆடும் ஆனந்தக் கூத்து விளக்குகின்றது. அணுவிலும் இந்த ஆனந்தக் கூத்தையே நாம் காணுகின்றோம் என்பதை மணிவாசகப் பெருமான்,

**"பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்**
**பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்**
**கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை**
**வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லைக் கண்டேனே'**

(திருவாசகம் - கண்டபத்து 10)

என்று விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் ஒருங்கே காண்கின்றனர்.

முடிவாக நோக்கின் "அறிவே சக்தி" என்ற உண்மையை மெய்யறிவு பெற்ற மெய்ஞ்ஞானிகளும் அறிவியல் அறிவு பெற்ற விஞ்ஞானிகளும் ஒருதளத்தில், ஓரிடத்தில், ஒன்றாகவே சந்திப்பதை மாணிக்கவாசகரது திருவாசகத்தினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. அறிவியல் காணாத அல்லது காணமுயலுகின்ற ஒன்றை ஆன்மிகவியல் கண்டுகொண்டது. விஞ்ஞானத்தின் முடிவு மெய்ஞ்ஞானம். அதுவே அறிவின் எல்லை. அண்ட சராசரங்கள் எல்லாம் இறைவனின் படைப்பே ஆகும்.

**நன்றி - சைவநீதி- (ஏவிளம்பி - ஐப்பசி, கார்த்திகை, மார்கழி)**

**சடையனார்**

சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திருமகனாகப் பெற்ற புனிதர். திருநாவலூரர். இவர் முத்தியடைந்த திருநாள் **மார்கழித் திருவாதிரை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகப் பாடல் பெற்ற திருத்தலங்கள்

**சித்தாந்தச்செம்மணி செல்லையா நவநீதகுமார் MIA.**

திருப்பெருந்துறையில் திருவாதவூரடிகளுக்கு தீக்ஷை மந்திர உபதேசம் செய்த பரமாசாரிய சுவாமிகளான இறைவன் "உத்தரகோச மங்கை முதலாம் தெய்வீக லிங்கமேனி வைத்த நம் பதிகள் தம்மில் வணங்கி, கழுக்குன்ற மென்னும் மந்நெடும்பதி இறைஞ்சிப் பொன்னினம்பலத்திலெய்தி யெம்பதம் பெறுவாய்" என்றார். திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையில் "திருந்திய குருந்தின் கீழோர் தெய்வ பீடிகையுஞ் செய்து வரந்தரு செய்ய பாத மலர் வகுத்திறைஞ்சி யாங்கே யிருந்தனர்" அவ்வண்ணம் இருக்கும் நாளிலே வெண்பிறை முடித்த வேணி விண்ணவ ரன்பிலாத பண்பின ரெனினுந் தம்மைப் பாடினர்க் கிரங்கு வாரென் றெண்பெறு நமச்சி வாய வாழ்கவென் றெடுத்து நாதன் வண்பதம் புகழ்ந்து ஞான வாசகம் புகலலுற்றார். திருப்பெருந்துறையிலே திருவாசகத்தில் முதலாகவுள்ள சிவபுராணத்தை முதலிலே பாடினார். திருவாதவூரடிகள் பல தலங்களுக்குச் சென்றிருந்தும் திருபெருந்துறை, உத்தரகோசமங்கை, திருத்தோணிபுரம், திருவாரூர், திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், கோயில் (சிதம்பரம்) ஆகிய ஏழு தலங்களில் திருவாசகம் பாடியுள்ளார். இவற்றுள் திருத்தோணிபுரம், திருவாரூர், திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், சிதம்பரம் ஆகிய ஐந்தும் தேவாரப் பாடல் பெற்ற தலங்களாகும்.

**தலங்களும் பதிகங்களும்**

**01) திருப்பெருந்துறை**

01. சிவபுராணம்
02. திருச்சதகம்
03. திருப்பள்ளியெழுச்சி
04. செத்திலாப்பத்து
05. அடைக்கலப்பத்து
06. ஆசைப்பத்து
07. அதிசயப்பத்து
08. புணர்ச்சிப்பத்து
09. வாழாப்பத்து
10. அருட்பத்து
11. பிரார்த்தனைப்பத்து
12. குழைத்தப்பத்து
13. உயிருணிப்பத்து
14. பாண்டிப்பதிகம்
15. திருஏசறவு
16. அற்புதப்பத்து
17. சென்னிப்பத்து
18. திருவார்த்தை
19. திருவெண்பா
20. பண்டாய நான்மறை

**02) கோயில் (சிதம்பரம்)**

01. கீர்த்தித்திருஅகவல்
02. திரு அண்டப்பகுதி
03. போற்றித்திருஅகவல்
04. திருப்பொற்சுண்ணம்
05. திருக்கோதும்பி
06. திருத்தெள்ளேணம்
07. திருச்சாழல்
08. திருப்பூவல்லி
09. திருவுந்தியார்
10. திருத்தோணோக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. திருப்பொன்னூஞ்சல்
12. அன்னைப்பத்து
13. குயிற்பத்து
14. திருத்தசாங்கம்
15. கோயில் மூர்த்ததிருப்பதிகம்
16. கோயில் திருப்பதிகம்
17. கண்டபத்து
18. அச்சப்பத்து
19. குலாப்பத்து
20. எண்ணப்பதிகம்
21. யாத்திரிரைப்பத்து
22. திருப்படையெழுச்சி
23. திருப்படையாட்சி
24. ஆனந்தமாலை
25. அச்சோப்பதிகம்

**03) உத்தரகோசமங்கை** 1. நீத்தல் விண்ணப்பம்
**04) திருவண்ணாமலை** 1. திருவெம்பாவை 2. திருஅம்மானை
**05) திருக்கழுக்குன்றம்** 1. திருக்கழுக்குன்றப்பதிகம்
**06) திருத்தோணிபுரம்** 1. பிடித்தபத்து
**07) திருவாரூர்** 1. திருப்புலம்பல்

மேற்கூறிய தலங்களைவிட வேறும் சில தலங்களை மாணிக்கவாசகர் தரிசித்ததாகக் கடவுள்மா முனிவர் திருவாதவுரடிகள் புராணத்திலே குறிப்பிட்டுள்ளார். அவை
1. திருவிடைமருதூர்
2. திருமுதுகுன்றம்
3. திருவெண்ணெய்நல்லூர்
4. கச்சியேகம்பம் (காஞ்சிபுரம்) என்பனவாகும்.

**நன்றி - சைவநீதி- (ஏவிளம்பி - ஐப்பசி, கார்த்திகை, மார்கழி)**

**கலிக்கம்ப நாயனார்**

திருப்பெண்ணாகடத்தில் வணிகர் குலத்தில் தோன்றியவர் கலிக்கம்ப நாயனார். சிவனடியார்களை அமுது செய்விப்பவர். ஒருநாள் அடியவர்களின் காலைக் கழுவும் போது மனைவி நீருற்றத் தாமதமானாள். நீரை வாங்கிக் கொண்டு அவள் கையை வெட்டிவிட்டார். பின்னர் தன் கையால் நீருற்றிக் கழுவினார். அமுது செய்வித்தார். இம்முறை திருத்தொண்டு செய்து இறைவனடி சேர்ந்தார். இவர் முத்தியடைந்த திருநாள் **தை ரேவதி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற்செல்வரின் மணிவிழா



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது








திருமகள் அழுத்தகம், சுன்னாகம். தொ.பே: 021 224 4510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org